சிவமயம்.

சாதுகாமாக்ஷியம்மன் துணை

## மஹாமகக்ஷத்திரிய

# குலபுராணம்.

மதுரை ஜில்லா விருதுபட்டி தாலூகா செவலூர்

கனதனவியாபாரி ஸ்ரீமான்

பு. கருப்பஞ்செட்டியாரவர்கள்

குமாரரும்

ஸ்ரீ சிவசண்முகக்கடவுள் பக்தஜனசபை உபதலைவரும்

கன்னல்மொழி பௌராணிகருமாகிய ஸ்ரீமான்

செ. பு. க. அங்குசாமி செட்டியாரவர்களா

லியற்றி

ஷை நூலாசிரியரின் ஆசிரியரு ளொருவராகிய

மஹாஞானபாநு—சதாவதானம்

ஸ்ரீலஸ்ரீ பூ. மு. நாவலரவர்களால்

பார்வையிட்டு

ஷை கருப்பஞ்செட்டியார் அவர்களால்

சென்னை பூலோகவியாசன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரெஜிஸ்டர் செய்யப்பட்டது

1915

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# முகவுரை

அகண்டபரிபூரண சச்சிதானந்த சுத்தவாச்சியார்த்த கனிபூதராயும் மான்மழு அபயவரத சதுர்ப்புஜ காளகண்டதிரிநேத்திரராயும், சத்தியோசாதனாகிய பரமசிவத்தின் திருவாக்ஞையால்பிரமன் சகலவுலகங்களையும் ஆன்மாக்களையுஞ் சிருட்டிக்கவறிவாற் சிறந்தமிக்க பெரியோர்களால் வருணாச்சிரமங்களிற் ஒழுகுவாது, பெரும்பயனாகிய புகழுடையுமாறு - பலகுலபுராணங்களியற்றியுளார் அதுபோல் சுத்தஞானம், ஒழுக்கம், பக்தி, வாய்மை, பொறைவீரம், கல்வி, இது முதலியவைகளிற்சிறந்தும் பல்லாயிரஅண்டங்களையுந்தனது கர்ப்பத்தில் வைத்துக்காத்தருளிய வுலகமாதாவாகிய சாதுகாமாக்ஷியம்மையாரின் பூரணதிருவருள்பெற்றவரும் முப்முடித்தாங்கி மூவேந்தரிற் சிறந்து விசாலாவதிப்பட்டணத்தை யரசாண்டவரும், புத்திரப்பேற்றவாவினால் அரசைத்துறந்து தவமாற்றியும், மஹாமுத்திநகரமாகிய பிருதிலிங்கமெனும்-ஏகாம்பரநாதன் ஆன்மாக்கள் வுஜ்ஜீவனார்த்தம் எழுந்தருளியிருக்கும், திவ்வியதிருப்பதிகளிற் முதன்மைபெற்றதுமானதிருக்காஞ்சிமாநகரில், சேர-சோழ-பாண்டிய காலத்து தாமும் ஓர்குடியாளர்போல்வசித்து, தங்களின்சத்தியம், பொறை. ஒழுக்கம். வீரம். அன்பு, இவைகளை நிலைநாட்ட அஃதோர்ந்த சோழனால் முப்பத்திரண்டு பிருதுகளைப்பெற்று அநேகவீரர்களின் திறமொடிக்கியும், தமக்கு ஒருவரும் நிகரிலாது வாழ்ந்துக்கொண்டிருந்து கடைசியாக சோழன் கொண்டதுற்யெண்ணத்திற்கு இணங்காதவர்களாயிருக்கச் சோழன்வெட்கி சாபங்கொடுக்க அவனுக்குப் பிரதிசாபங்கொடுத்து அந்நகரைநீங்கயுத்தேசித்து நம்முன்னோர்கள் அந்நகரைவிட்டு நீங்குங்கால் நம்மனோர்க்காதாரமாய் நங்குலதெய்வமான சாதுகாமாக்ஷியம்மன் சந்நிதானத்தின் காமகோட்டிபீடத்தில் சிலாசாதனமாகவமைந்துசென்றனர், அந்நாள்தொட்டு மேன்மையுறநிலைத்தஅச்சிலாஸாஸனத்தை, ஜெகத்குருசங்கராச்சாரிய சுவாமிகளாற் தாம் பிரஸாஸனமாக்கினர், அதைக்கண்ணுற்றபான் நம்மினத்திற்குண்டாகியபெரும்புகழ் என்றும் அழியாதிருக்குமாறு, நம்முன்னோர்களாலமைந்த சிலாஸாஸனத்தை முதல்நூலாகக் கொண்டும்ஷெ தாம்பிர

ஸாஸனமும்-சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் சென்னைமாநகராதி காரியாயிருந்த-கனம் எல்லிட்துரையவர்கள் தீர்மானித்த, உறுதி மொழியையும் வழிநூலாக்கொண்டு சார்புநூலாய்- பழையன கழித லும்புதியன புகுதலும் என்றசூத்திரத்திற்கிணங்க, நீக்கவேண்டுவன நீக்கிதற்கால நாகரீகங்களுக்குத்தக்கவாறு சேர்ப்பன சேர்த்து மிக எளியநடையில் முன்னூற்றம்பது செய்யுளில் சுருக்கமாகி இப்புரா ணத்தைப்பூர்த்தித்து எளியவசனநடையில் இதற்காதாரமாகிய தாம் பிரஸாஸனத்தை இத்துடன் சேர்ப்பித்தும் நங்குலதெய்வமான சா துகாமாக்ஷியம்மனின் சகஸ்த்திர நாமமாகிய, ஆயிரந் திருநாம ங்களையும் பூஜிப்போர்க்கும்ஸ்தோத்தரிப்போர்க்கும் வாசிப்போர்க் குமுதவுமாறு எமதுகல்விகேள்வி, ஆராய்ச்சிக் கெட்டியவாறு அமை த்துளேன் அஃதால் இப்புத்தகத்திற் குற்றங்குறைகளும் எமதுசிற்ற றிவுக்குப் புலப்படாத அரியபெரிய, வேறுபலவிஷயங்களாயினும் எம்மனோர் எமக்கு யெடுத்துக் கூறுவாராயின் அவரைப்பேருதவி புரிந்தவரெனக்கருதி நன்கு மதித்து மகிழ்வதுடன் அவர்பக்கலில் நன்றியாராட்டுவதோடு அவ்விஷயங்களையும் மறுபதிப்பில் அவர்பெ யருடன் பிரசுரப்படுத்த சித்தமாயிருக்கிறேன்.

| | |
|---|---|
| ஆனந்தஹூபங்குனிமீ<br>பேறம்பாலுசெட்டிவீதி<br>வன்னியம்பதி - சென்னை. | சாதுகுலாபிமானிபௌராணிகர்.<br><br>சே. பு. க. அ. |

கோயம்புத்தூர்.

யாகக்ஷத்திரியகுலப்பிரகாசிகை யென்றும் மரபுநூலாசிரியர்

வே. ப. வெங்கடராமஞ்செட்டியாரவர்கள்

இயற்றிய

# சிறப்புப்பாயிரம்

ஸ்ரீசுவாயம்புமனுவின் ஏகபத்தியத்திற்குட்பட்ட இப்பூமண்டலத்தை சப்ததீவுகளாகவும் அவற்றில்முதன்மைபெற்ற நாவலந்தீவை நவகண்டங்களாகப் பிரிக்கப்பெற்றதில் அனந்தயுகங்களாய்ஜாதிபிரிவினையடைந்துவருகின்றார்கள் பூர்வம் பரமனால் நான்குவகுப்புகளாகப் பிரிக்கச்செய்தும் பின்னுங்காரணார்த்தமாக சிலஜாதியார் உற்பவித்தார்களென்று சுருதிகள்கூறினும் இக்காலத்தில் அதன்உட்பிரிவுகளாக அனந்தம் ஜாதியராய்காணப்படுகின்றனர் இவற்றிலெவ்வொரு ஜாதியரும் சிறப்புப்புற்றவர்களாய் சிறப்படைந்து மற்றோர்காலங்களிற் சோர்வடைந்தவர்களாயும்காணப்படுகின்றார்கள் ஆனதால்பெரியோர்கள் குலபுராணம ஏற்படுத்தி அவ்வக்குலத்தினர். மரபொழுக்கமாறாமலும் ஆசாரப்பிரஷ்டம் நேரிடாமலும் என்றும் மங்காப்பெருங்கீர்த்தியடையுமாறு வரம்புகளேற்படுத்த அவ்வழியே ஒழுகுவாராயினர்அதுபோல் பிரமன்யாகத்தில் உற்பவித்தக்ஷத்திரியகுல பூர்வோத்தரம் அறிந்த நமமனோர்யாவருக்கும் என்றும் மாறாக்கீர்த்தியைவிளக்குமாறு அநேகநூல்கள் பிரமாணசகிதம் வசனநடையாகவும்நாடகநடையாகவும் எழுதிவைத்தனர் அஃதோர்ந்தயானும்அம்பிகையின்திரு ஆக்ஞையினால் அடியேனுடைய கல்விகேள்வி ஆராய்ச்சிக் கெட்டியவாறு தற்கால நாகரீகங்களுக்குத் தக்கபடி யாகக்ஷத்திரியகுலப்பிரகாசிகை யென்னும் நூல் எழுதி பலதேசங்களிலுமுள்ளநங்குலாபிமானிகளுக்கு அனுப்பியதும் பெரிதன்று.

ஏனெனில் இக்காலத்தில் பொருள்தேடுவதிற்சுயகாரிய நிபுணரெனப் பேரெடாது பரோபகாரரென புகழ்பெறுவதே பூஷணமெனக் கொண்டுணர்ந்தவராகிய இத்தென்னாட்டுக்கு இராஜதானியாகியதும்நம்முன்னோர்கள் அம்மையாரின் திருவருளேற்ற தொண்டமண்டலத்தின் கோட்டங்கள் இருபத்திநான்கி லொன்றாகியதும் திரு

ஞானசம்பந்தசுவாமிகளால்எலும்பைப்பெண்ணாகப்பாடம்பெற்றது உலகமாதாவாகிய சர்வேஸ்வரி திருமயிலாய் நடிக்கப்பெற்ற திவ்ய திருமயிலை என்னும் க்ஷேத்திரத்தைச்சார்ந்த சென்னைவாசி எமதரிய பந்துமித்திரர் செவலூர் கருப்பண்ணசெட்டியார்க்குமாரரும ஸ்ரீசிவசுப்பிரமணியக்கடவுள் பக்தஜனசபையின் உபதலைவரும் கன்னல்மொழி பௌராணிகர் ஸ்ரீமான் செ. பு. க. அங்குசாமிசெட்டியாரவர்கள் நமதுஜாதியின் சிறப்பைவிளக்கத் தமிழில் இராமாயணம இயற்றிய வில்லிபுத்தூராழ்வார்கவிக்கும் ஒப்பிடத்தக்கதாய் செய்யுள் ரூபமாக முப்பழமும் தேனும்பாலும் உடனசேர்ந்ததுபோல இனியசெந்தமிழ்ச் செய்யுள்நடையில் இயற்றி யாசகக்ஷத்திரிய குலபுராணமென மகுடப்பெயர்தந்து நம்மவருக்குமாத்திரம குறைந்தவிலைக்கு அளிப்பதும் மற்றன்னியருக்கு விற்பனையில்லாததாய்ப் பிரசுரித்த விளம்பரமே அன்னவர் நம்மவர்மேற்கொண்ட அபிமானமென விளங்குகின்றது.

இப்புராணமானது நம்ஜாதியார் அனைவருக்கும் பரம்பரையைத்துலக்கிக்காட்டக் கூடிய இந்நூலைநம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பாடசாலைகளில் தமிழ்ப்பாடமாய் ஏற்படுத்தி வாசிக்கவும் மற்றையேனையோர்களுக்குச் சத்காலக்ஷேபத்திற்கு உகந்த நூலாகவும் பயன்படத்தக்கதாய் இருப்பதால் யாவரும் வாங்கி வாசிக்கவேண்டுமாய்க்கேட்டுக்கொள்வதுடன் நமது குலவழிபடுகடவுளையும் வணங்குகின்றேன்.

இப்படிக்கு

யாசகக்ஷத்திரியகுலாபிமானி

வெ. ப. வெங்கிட்டராமஞ் செட்டியார்

கோயம்புத்தூர்.

திருவிளையாடற்புராணம்,
விநாயகபுராணம் காசிகாண்டம்
முதலியவற்றின் சிறந்தவிருத்தியுரையா
சிரியரும்சிவமஹாபுராணம் பஸ்மமாஹாத்
மியம்ருத்ராக்ஷமஹாத்மியம் ஹரிஹரதாரதம்மியம்
முதலியவற்றின் மொழிபெயர்ப்பாசிரியரும் சிறப்புப்
பெயரகராதி சிவபாராக்கிரமம் தேவிபராக்கிரமம் முதலி
யவற்றின் நூலாசிரியரும் பற்பலநூல்களின்பரிசோதனாசிரியரு
ம் பதிப்பாசிரியரும் சென்னைகிரிஷ்டியன்காலேஜ்மாஜிதமிழ்ப்பண்
டிதரும் சைவப்பிரசாரகரும். இந்நூலாசிரியரின்போசிரியருமாகிய.

மஹாவித்வான் ஈக்காடு.

## இரத்தினவேலுமுதலியாரவர்கள் குமாரர்

இந்நூலாசிரியரின் போதகாசிரியர் சென்னைவித்வான், ஈக்காடு
சபாபதிமுதலியாரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்,

---

சென்னைமாநகரதனிற் சிறப்புடனே நானுளுஞ்செழித்து வாழுஞ்
அன்னைஸ்ரீ சாதுகாமாக்ஷியம் மன்பதத்தையன்பாய் போற்றி
முன்னைநாள் புரிதவத்தாலவரருள்பெற் றிட்டமரு முன்னுசீர்த்தி
தன்னைநேர் தென்தெலுங்கு தேசாதி க்ஷத்திரியர்சார்குலத்தில்

கொண்டைமயினடமாடு தண்டலைகள்பலசெறிந்து கோதொன்றின்றி
மண்டுபுகழ்ச் செவலூரிற் கருப்பண்ணவேள்தவதில் வந்துதித்தோன்
எண்டருசீர்ச்சாலைவிநாயகனடியை யிரவுபகலேத்தி வாழ்வோன் [ன்
மண்டலத்திலெவ்வெவரும்போற்றிடவே நனிகீர்த்திவசிக்கப்பெற்றே

என்றனையாசிரியனுவெந்தையே ராசிரியனெனக் கொண்டோன்
பன்னருஞ்சீர் மஹாமக க்ஷத்திரியகுலபுராணத்தைப்பகர்ந்திட்டானுல்
மன்னியபுராணப்ரசங்கஞ்செய் மாட்சியினைவசிக்கபெற்றோன்
கன்னல்மொழி யங்குசாமிப்பெயர்கொள் சீர்த்தியுற்ற கவிவல்லோ
[னே.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்
அட்டாவதானம் செந்தமிழ்ப்பாநு
அண்ணாமலைப்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூவனைப்பொலிவேளா ளோம்பும்பொற்புறும் பதியாம்மிக்க
சேவலூர்தன்னிற் றோன்றிச்சிறப்பினி லொப்பாரில்லா
காவலனெனவேவாழுங் கருப்பண்ணனீன்றமேலாம்
பாவலன்செய்தநூற்குப் பாரினி லிணையுமுண்டோ

சென்னை இராயபுரம்
தமிழ்வித்வானும் சேட்டாக்டருமாகிய
ஸ்ரீமான். வே, கி நாராயணசாமிப்பிள்ளையவர்கள்
இயற்றிய
எண் சீ சந்தாசிரியவிருத்தம்,

சென்னை சாலை விநாயக ரன்பிருன்
செவ்வலூராக்கருப் பண்ண னளித்தவன்
நன்ன யம்பெறப் பல்கலைச் செய்தவன்
நற்ற மிழக்கவி ராஜப்ர சங்கிசீர்
பொன் மஹாமக க்ஷத்திரியக்குல
புராணம் வண்டமி ழிற்கவி யாகவே
பன்னி னுஞ்சம ராபுரி வேளடி
பற்றி னுனங்கு சாமிப் பனவனே,

ஷை யார் பிரதமமாணாக்கர்
த பூ. முருகேச நாயகராலியற்றிய
எண்சீராசிரியவிருத்தம்,

மஹாமகக்ஷத்திரியகுல புராண மாநூல்
வகுத்தனனம் மரபினுபர் தமிழின் வல்லான்
சகானுபவ முணர்ந்தவன்பர் சங்க மாரி
தனின்மிக்கான் யெனையாளுந் தயவை மூவர்

அலை ஆயெம் மரசேயுண் முகமே யென்று
ஆராத வழுகையருஞ் சிவத்தை யேற்றும்
மகானிசையார் சைவநெறி யடியார் பத்தி
வளரங்கு சாமியெனு மன்ப னன்றே.

---

பள்ளிமடந்தாலூகா மறவர்பெருங்குடி.

ஹரிஹரன்பக்தஜனசபைத்தருமபரிபாலன

வித்துவான்

கோ, கோனைய செட்டியாரவர்கள இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நேமியிற்றகையும்நீதி நெறியெனுநியமமுற்ற
நாமமாந்தாமங்காஞ்சித்தலமரசாண்டமன்னர்
வாமனமறைந்தான்சென்னைமாபதிவசிப்போனங்கு
சாமிவித்வனன்சங்கத் தலைவனென் றுலகுசாற்று

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சென்னைநன் நகரான்சிவமதைக் கருதுஞ்சிந்தையான்சீரெனும்செல்வம்
பிள்ளையுஞ்சுற்றம் பிசகிடாதிலங்கும் பேரகத்தான்பெருந்தவத்தான்
கன்னல்சொற்கவியான்கருத்தினி லுசந்தேகச்சிராடாண்டவார்கதையை
இன்னிலத் திசைத்தானினிதிதைப் போன்றேயிசைப்பவ ரானெனவிய
[ம்பும்.

---

கோயமுத்தூர் யாகக்ஷத்ரிய வம்ஸம் பரமபாகவதர் ஸ்ரீலஸ்ரீ,

வெ. ப. காளிந்திதாஸ் சுவாமிகளியற்றிய

கலிவெண்பா,

---

திருவருளுந் தெய்வீக சப்பத்தி னூற்சிறந்த
குருவருளும யாகக்ஷத்திரியகுலம்-மருளகலும்
நன்னெறிசேர் திருமூர்த்திக்கவிராயன் நாடகமா
யின்னிசையி னூலிசைத்து மீந்தனனும்-உன்னுநலம்
விண்மணிபோல்விளக்க வேங்கடராமப் புனிதன்
கண்மணியா யாவருக்குங் கனிந்தளித்தா-மன்னுதிடம்
முன்னூலையாதரிக்கும் மூனிமொழியை யாராய்ந்து
பன்னூலின்பொருடெரியப் பகர்ந்தகனல்-அந்நூலை

ஒத்துபொருண் முரணாது உற்றபுராணப் பரிவாற்
சித்தமதிலேதெரிந்து செய்யுளினால்-பக்தியுடன்
ஓதியதியோங்கிடவும் மேதினியிற் றந்தவள்ளல்
கோதின்மர பபிமானங் கொண்டகுணச்-சாதுரியன்
இங்கிதஞ்சேர் கவிவாணன் இயல்பாகப் பரஞானன்
அங்குசாமிக்குநிகர் யாரேகாண்- துங்கமுடை
மருவதனைபலர்கவரும் வாறெனவின் னூலருமை
உரிமையொடு யான்புகழ்தல் முறைமையதோ-பிறர்மொழிதல்
மிகுதியென வேவிடுத்தேன் தகைமையறி வாரறைய
தகுதிறைபெருமையெலா மே.

சென்னை வித்துவான்
ஈகாடு-சபாபதிமுதலியாரவர்கள்
மாணாக்கர்
இகபரஞானத்திரட்டு என்னும் இல்லறபூஷண நூலாசிரியர்
சோ-அப்பாதுரைமுதலியாரியற்றிய
நற்சாட்சிப் பத்திரம்.

ஸ்ரீசாதுகாமாக்ஷியம்மன் திருவருட்கடாக்ஷம் பெற்றுவிளங்கும் கனதனவியாபாரியாகிய செலூர், கருப்பண்ண செட்டியாரவர்கள்குமாரர் பௌராணிகர்-கன்னல்மொழி செ-பு-க-அங்குசாமிசெட்டியாரென்பார் எமதுஆசிரியர்மாட்டு என்னுடன்கூடக் கல்வி பழகியவர் இவர்தம்குலத்தின்பெருமையை யாதுகாறும்ஒருவரேனும்செய்யுள்ரூபமாகத் தக்கஆதாரங்களோடுவெளி யிடவில்லையென்று அக்குறையை நீக்குவான் வேண்டிமஹாமத க்ஷத்திரியகுல புராணம்என்றும் ஒரு தாரணம்தேனினும் அமிழ்தினும் இனியபாக்கள் சுரேகஞ்செறித்து வரைந்துள்ளார் இவர்பொருட்செலவை ஒருசிறிதும்நோக்காது குலாபிமானத்தையேபெரிதாக எண்ணிவெளியிட்டது இவர்தம்பெருந்தயாளகுண சீலத்தையும்விடாமுயற்சியையும் தெற்றெனவிளக்குகின்றது குலாபிவிருத்தியை முன்னுக்குக்கொண்டுவருவாரென்று எல்லாம் வல்லமுழுமுதற்கடவுளை மனவாக்குக்காயங்களால் சந்ததமும்வணங்கித் தொழுகின்றேன், சுபம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ சாதுகாமாட்சியம்மன் துணை.



ம ஹா ர ஷ க

# க்ஷத்திரியகுல புராணம்.

விநாயக வணக்கம்.

பூவனை பொலங்கு வட்டிப் பூதரப் பிடிபு மோய்புங்
காவனை கயிலை காணுங் கருணையங் களிறு யீன்றான்
மூவினை மலங்க டைய முப்பகம் பொழியப் பணைக்
தேவனை நாளு மேத்திச் சித்திபெற் றுய்கு தும்மே.

## கடவுள் வாழ்த்து.

பரசிவம்

மானினை யிருந்த வானை மாற்றரு மமிர்த மென்னு
மானினை யொருபா கத்து மகமுனி வோர்கள் போக்கு
மானினை யொருகரத்தும் வான்வை நடங்காத் தோய
மானினைச் சிரத்து வைத்த மகிபனை வணக்கஞ் செய்வாம்.

பரசிவை

மும்மைசே ருலக மாகி முதிருல குயிர்க ளாகி
இம்மைசே ரிடறு தீய வேத்தகம் வகைத்து ஞானச்
செம்மைசே ரொப்பி லாத திருவருண் முதல்வி யென்னு
மம்மைசீ ருபய பாத மண்மையா லணைத்து வாழ்வாம்.

## சாலைவிநாயகர்

வேலைமுழு ளாவாவில் விழைகண்ணன் மருகோனை
மாலைபெரு யகடீக்கு மாமுகனை வானமருஞ்
சோலைநறு றுருக்களிரைச் சூழ்கவரு ளுயர்சென்னைச்
சாலைவிநா யகமணியைச் சார்ந்துசரண் புகுந்துவமே.

## குமாரக்கடவுள்

ஒருவனுக்குக் குடிலைபொரு ளுரைத்தானைப் பொருளைநதி
யுகக்குங் கந்தந்
தொருவனுக்குக் கலையமுதை நிறைத்தானைப் பலவுயிர்க
ளுகக்குஞ் சந்தத்
தொருவனுக்குத் திருக்கரத்தேர் கொடுத்தானை யும்பர்குல
மோங்கி வாழ்க
வொருவனுக்குப் பதநீழல் விழைத்தானை யுறுதிபெற
வோதி வாழ்வாம்.

## திருநந்திதேவர்

வாசவனுன் முகனெடியோன் வானவரும் வந்திக்கும்
ஈசனருஞ் சந்திதிபா லீண்டுநெருங் காவண்ணம்
வீசமொரு கைப்பிரம்பு விலகுதிரென் றையுயர்த்து
நேசமுறுந் திருநந்தி நிதித்தானை நினைப்பாமால்.

## கலைமகள்

பாராதி யுயிர்படைத்தோன் றேவி யாகிப்
பளிங்குநிற நாயகியாய்ப் பருத்த முத்தின்
தாராத வன்மறைக்கும் சதுர்பு ஜத்துத்
தனியபய வரதபுத் தகமு மேந்துந்
தீராத வெண்மறைக்குத் திருவா ளாகிச்
சிறந்தாளி னிருபதத்தைச் சிந்தை செய்ய
வாராத வொருபதமு மெனக்கிங் குண்டோ!
மகக்ஷத்ர்ய குலபுராணம் வகுக்குங் காலே.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

தந்தைமனக் கவலையறுத் தன்புடன்பா றந்தவரைச்
சதியே காட்டும்
விந்தைமனக் கையுடையான் சமணர்முகர் கழுவேற
விடுத்த மேலோன்

முந்தைதவனைப் பொற்றாளம் பொற்சின்னம் முடன்றாய
முத்துப் பந்தர்
சிந்தைதினம் பெற்றானைச் சீர்காழி வந்தான்றனை
சேர்ந்து வாழ்வாம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

ஒருநாளுஞ் சிவசிந்தையில்லாத க்ஷணிகர்குழு
வுள்ளனைய
வொருநாவுக் கலிகலயா வொப்பிலந்தாக் கரப்பதிக
மோதி நீடுங்
கருநாளுந் துடைத்தரிய கடற்றிரையில் கன்மிதப்பக்
கருணை காட்டுந்
திருநாவுக் கரசர்பதஞ் சிந்தைகுடி கொண்டென்றுஞ்
சிறந்து வாழ்வாம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

மறைநான்கு மறியாத வனச பாத
மறலிமுடி தனையிடற வைத்த பாத
முறைபாலெம் முகில்வண்ணன் காணாப் பாத
முன்னரக்கன் முடி திரித்த முடிவில் பாதங்
குறைநோக்கி யொருகாலுக் கிருகா லாகக்
குறித்தகங்குல் பரவைபனைக் குடிகொ ளில்லம்
நிறையார்க்க நடக்கவைத்தோன் நிரச பாத
நிதிதன்னை யதிபிருத்தும் விதிய மன்றே.

## மாணிக்கவாசகசுவாமிகள்

பெருவாத மேபுரியும் பிணக்காட்டுச் சமணர்குழாம்
பிரிந்தனைய
வொருவாத திருவாசகச்சாழல் கேட்பவிடை
யுரைக்கு மூகைக்
கருவாத பேதொலைத்துச் சிவசபையுஞ் சிறந்தோங்கக்
கருணை செய்த
திருவாத வூரடிக ளடிக்கமலந் தலைக்கமலஞ்
சேர்ந்து வாழ்வாம்.

## அறுபத்துமூவர்.

வத்து மூவகை யேகமால் மன்னிய
சித்து மூவகை சேர்சிவத் தண்ணருட்
சத்து மூவகை பத்தி சேரறு
பத்து மூவர் பதமல ரேத்துவாம்.

## பட்டினத்தடிகள்.

மூட்டினத் தமருஞ் செல்வ மூன்னவரி பன்னை செல்வ
மொட்டினத் தாரச் செல்வை முயர்தருங் கிளைபற் செல்வம்
விட்டினத் தாரு செல்வம் விழைசிவச் செல்வம் பெற்ற
பட்டினத் தடிகள் பாத பங்கயம் பணிந்து வாழ்வாம்.

## காஞ்சி ஏகாம்பரநாதர்.

வரநாத வாணன்குடா முழக்கு நாத
யால்பலசோரான் அதிநாத மருமா ணைதஞ்
கரநாத மறைநாத நதிசெய் நாதந்
துதிநாதந் துதிக்கவருக் கன்பு செய்யும்
வரநாத ரெளியரவு வணங்கு நாத
மங்குதிருக் கச்சினிலே வாழு மேகாம்
பரநாத னிருதாளை யூன்று போதும்
பத்தியுடன் சித்திசெய்து முத்தி சேர்வாம்.

## காஞ்சி காமாட்சியம்மன்.

பூஞ்சோலை முத்தமரு மணிக ளெட்டும்
பொய்கையிரு நான்குபொரு ஸ்தான மேழும்
மாஞ்சோலைப் புள்ளினங்க ளாறு வீறு
வாளளா விருக்ஷங்க ளைந்து நாலு
பாஞ்சாலை யரியாச னங்க டொன்று
மற்புதஞ்சேர் திருக்காஞ்சி யார்க்க வந்த
தேஞ்சோலைக் காமாட்சி யம்மை பாதஞ்
சென்னிபெறு முன்னணியாய் மன்னி வாழ்வாம்.

## அவையடக்கம்.

பெருவர மளிக்குங் காஞ்சி பிரமர்தம் பிரம ஞவார்
திருவரம் பாலித் தன்பு செய்தருள் முதல்வ பக்க
புரிவரத் தாலே க்ஷத்ரிய புராணமும் வகுக்க நேர்ந்தா
லிருகர மற்றுண் வேலை யெளிதினி னீந்த வெண்ணி

இதுவுமது

துணிந்தெழு செயலை மானுஞ் சுரர்பதி சிவஞா னத்திற்
கணிந்தெழு கோத்ர நூலை பருமையாங் கவிபு னைக்கப்
பணிந்தெழு மௌனத்து குற்றம் பார்ப்பரோ பாரிற் செல்வ
ரணிந்தெழு சுதலை யீன்ற ரருகிருந் துரைத்த மாற்றம்

இதுவுமது

சேர்ந்திடும் பாந்தள் தேரார் செறிமுளென் றெண்ணார் சேற்றி
லார்ந்திடுந் தன்மை நோக்கா ரருபலர் பறிப்பா ரேபோல்
சார்ந்திடுவ கையிற் சார்பு தழைத்திடச் சாற்று வாகைத்
தேர்ந்தவர் குற்றங் கூறார் சிறியவர் கவிப்பா ராயால்

மஹாமக க்ஷத்திரியகுல புராணம்.

# முதலத்தியாயம்.

---

விருத்தம்.

உலகியன் முடிக டத்தி யுள்ளுடன் புறம்போய்ந் தாய்ந்தே
யலகியன் மகுட டத்தி யரசனி துறும்பெண் ணெண்ணி
விலகிய முமூட்சு ஞான வித்தகர் முதன்மை மீற
விலகிய வியாத மேலோ னியலநுஷ்டான மேய 1

உழைபுரி தறைபாற் றோய வுழைபத்மா சனத்தின் மன்னி
விழைவுறுங் காலை பொன்போல் விளங்குபு முனிபுங் கோரிற்
றழைவுறு மும்மை லோகஞ் சஞ்சரித் திருப்பான் றண்டா
ளிழைவுறு முடிப டுத்தி யெழுந்திரு கரங்கு வித்து 2

எம்முளே யுயர்ந்தாய் வைய மீறறத் துறந்தாய் தூய்ய
மெய்ம்மறை யாக மங்கள் விரிமது வந்த ரங்கள்
செம்முறை செலுத்து க்ஷத்ரிய திகழெலாஞ் சொல்லக் கேட்டா
மம்முறை பொதிந்த ப்ரிதி விச்சுர னுவா னுண்மை 3

விரிவுட லுமைத்தி யென்ன வியாதனு முளம்பூ ரித்தப்
பரிவுட பூர்ண ஞான பாஸ்கர கேட்டி யாக
திரிவுழை க்ஷத்ரிய வம்ஸ நிதிமுறை குறிக்குங் காலைப்
பிரிவுபல் லேயு மாதராற் பெருமிதஞ் சொல்லு வாமால் 4

பண்ணளந் தவன்செ யுந்தி வந்தவன் மறையா னோடு
விண்ணவிர் மண்ட பத்தின் வீரசிம் மாச னத்தே
தண்ணவிர் கவறி வீசச் சார்ந்தினி திருக்க வெண்ணிற்
கண்ணுட லான்முக் கோடிக் கடவுளர் நெருங்கச் சென்று 5

தாழ்ந்தடி வணங்கிக் கைக டலைமிசைக் குவிய நின்று
சூழ்ந்திடுந் தானர் செய்யுந் துயர்முறை யெடுத்துக் கூறி

யாழ்ந்திடு முளங்க லங்க வருகெனக் கண்ணீர் பாய
வாழ்ந்திட வருட்செய் தாள வழுத்தினர் வணங்கினாரால் 6

இறைஞ்சிடச் சிரவ ணித்த விரணிய கற்ப னன்பர்
குறைதவிர் பரமன் பாலக் கொடியவர் செய்கை யாவு
மறைகுறு வள்ளி னென்றுங் கண்மைபாற் சேர்ந்தார் சேர்ந்த
முறையுடை யார்க டம்மை முக்கணு யகனு நோக்கி 7

வந்தகா ரியமென் னீவிர் வழுத்துமி னென்ப தீய
வந்தகா சூரன் றுன்ப மனைத்தெடுத் துரைப்ப வன்று
வந்தநே பிரம நீவிண் வரநதி வெள்ளி யாற்ற
வந்தநீ மருகோ லத்தான் வருகுவ னென்னக் கேட்டு 8

முதுமறை விதிப டிக்கே முகமொரு நான்குள் ளானும்
பொதுவிறை கங்கை யோரம் புகலரு யாகஞ் செய்ய
மதுநிறை கமல வான மாற்றரு சுபாவத் தோடு
கதுநிறை வீரங் காணக் கந்தனோ ரிளமை வீற 9

உம்பர்மிக் கிரனென் றேத வுலகர்செங் கோல னென்ன
விம்பர்கள் கொடுங்கோல் சாய்க்க விகபர மிரண்டு மேத்த
நம்பனை யுருவந் தாங்கி நடுமகந் தோன்றக் கண்ட
அம்பது மத்தோ னுங்க டியலெலாந் தொலைபு யாக 10

வன்னியில் வந்தான் மிக்க வன்மையா னகில லோக
மன்னவ னுத லாற்சீர் வளர்நிலை கொண்ட வாற்று
வின்னவன் றனக்குப் பீதி யீச்சுர நாமஞ் சூட்டிப்
பின்னரு மாசி கூறிப் பிரிதுற மனங்க னிந்து 11

மகமிசை யுதித்த வீர மாபுரு டோத்தம பொல்லாச்
சுகமிசை யிரணி யாக்கன் றநயனும் வந்து தோன்றிச்
சுகபதி சுக்ராச் சாரி சொற்றலைத் தாங்கி யைந்து
முகபதி தன்னை நோக்கி முடிவிலாத் தவப்பெ முற்றி 12

கருத்தினைக் கூடு சான்றோர் கனத்தினைக் காசு தன்னை
மருத்தினைக் கெடுப்பதானு மாமிசத் தானும் யாக்கை
பருத்திடா நித்ய சார பாம்பரை யாராற் பூவை
யொருத்திடா வரம் பெற்றனு னுயர்சத்ர்ய குலவி ளங்க 13

வதைபுரிந் திடுதி நன்மை வயங்குமென் றுரைத்த வேதன்
பதமல ரேத்தி யைய பகவனின் கிருபை முற்று
நிதமுட னிருந்து மாலவ் வினமேறு டவனுக் குற்ற
ரதகஜ துரகங் காலாள் ரணக்களப் புள்ளி னங்கள். 14

சொத்தவும் வடிபு ரத்தங் குடிக்கவு மசுரப் பெண்கள்
கத்தவுந் தேவர் சுற்றங் களிக்கவுங் குலம்பேர் கீர்த்தி
மெத்தவுந் தழைகச் செய்து வீர கேசரியாய் நிற்பே
னத்தவ னடியி ணைச்சிற் றருடியென் றிசைத்து மீண்டு 15

எழுபரி தடுத்தோன் வம்ஸ விக்ஷ்வாகு தனையன் பௌத்ரன்
மழுபுரஞ் சையன் தேவ மன்னனை யூர்தி யாக்கித்
தழுசுர நாக நாட்டிற் சதுரங்க சேனை சூழ
வழுதருஞ் சூரன் றன்னை வதைத்ததை மான வும்பர் 16

நாற்படை புடைபெ யர்ப்ப நாகநாட் டரசன் றனைக்
கோற்படை மாத வித்தன் கொள்கையா னடத்த வேறி
மாற்படை வெற்றிச் சங்கம் வழங்கிடப் பூதர் மன்ன
வேற்பட வீரப் ரீதி யிச்சுரன் போந்த காலை 17

முற்றவ வலிமை பெற்ற முறைமைபான் மமதை கொண்டா
னொற்றலர் கண்டு கூடி யுளமெலா நடுங்க வோடி
மற்றமை சேனை யோடு வருவது சூரற் கோதப்
பெற்றவன் புன்ன கைத்துப் பெருமித வமைச்சு நோக்கி 18

உள்ளுறை வற்ற வேத னுஞற்றிய திற்றை யாக
றெள்ளலி லுதித்த காலை நிசாதன வான வேற்ப
துள்ளலாங் கர்வத் தோடு சூரசைன் யங்க ளோரா
தெள்ளவே வருகின் றுறு விவணிவ ணுகா மேமை 19

முந்துறச் செல்லா நின்றால் முதிர்தருங் கீர்த்தி மேன்மை
வந்துறு வீர வன்மை மாறிடாப் பழியுண் டாகிச்
சிந்திடுஞ் சிறப்பு மற்றுஞ் சேர்ந்திடு வகைசொ லென்றே
யந்தகன் கொதித்துச் சீறி யடம்படு மிடிசொற் கேட்டு 20

ஒருபுடை யொப்பு மையால் யுத்தசைன் யத்த ராகி
யிருபுடை சூழா நிற்ப விருடருஞ் சூர னையா

யிரமுடை வெள்ளத் தோடு மீசனை யிறைஞ்சிப் பெற்ற
வரமுடை யத்ரத் தோடு வரைநிகர் ரதுரந் தாங்கி 21

அதிர்ந்திட வுலக மூன்று மசைந்திட கிரிக ளெட்டும்
முதிர்ந்திடச் சீற்றங் கொண்டு முரசொலி யிறைம டங்க
லெதிர்ந்திடுந் தேர்மேற் கொண்டாங்கெழுகடல்திரண்டவெள்ள
வெதிர்ந்திடுஞ் சேனை யோடு விரைந்தன தேவ சேனை 22

கண்டது மெய்ம றந்து கடுநடுக் குற்றுங் கச்சங்
கொண்டவுண் ணுப்பு லர்ந்து கோவெனக் கூவி யோடித்
தெண்டனிட் டிறைவன் பாலே செப்பினர் கரைகா ணுத
தண்டொடு சூரன் வந்த தருணமே தம்மைக் காப்ப 23

இன்னண மிறைஞ்ச பிர்தி வீசசூரன் சங்க நாத
மன்னுயிர் மாண்ட கார வரைதரு வில்லை யேந்தி
துன்னெடு நாணிபூட்டித் தொகை யிலாப் பாணந் தொட்டு
முன்னவிர் தான சேனை முதுகிடச் சிதைத்தா னுனல் 24

சூரனுந் தனது தேரைச் சொற்கண முன்ன டத்தி
வீரனு மகத்தில் விந்த வித்தக னோக்கி மிக்கத்
தீரனு மெம்பா லின்று சிறுபயல் செருக்க வல்லாய்
சாரமில் சிலரைக் கொன்ற நாட்டிகந் தளர விந்த 25

கணத்திலுன் கர்வமோட்டுக் காற்றில்பஞ் சாக்கி வீர
வணத்தினி லிழிந்த தேவர் வார்த்தையைச் செவிம டுத்தக்
கணத்துடன் வந்தா யாவி காலனூர் நகரச் செய்து
பிணத்துடன் பிணைப்ப னென்று பேசியே சரந்தொ டுத்தா 26

வேறு.

மேகமேழு மேககால வின்னடைந்து மின்னுபு
பாகமாக வத்திரக்கைப் பத்துநூறு ஆயிர
யூகமாக சங்கஞ்சோபஞ் சாகரமி ரட்டிட
வேகமாக பூமிவான மென்றுநிந்தி டாமலே 27

தேரின்மீது மேறிவந்த தேவன்மீது மாதலி
தேரின்பாகன் மீதுமாகச் சேன்படைகள் மீதினுந்
தாரின்மன்னர் மீதினுஞ் சராசரங்கள் மீதினு
சோரிசோர வாரிவாரி சூரன்சிந்தி னனரோ 28

சிந்தகண்ட தேவரிட்டஞ் சிந்தைதளர்ந்து வாடியே
யந்தகால மென்னவன்னி யலறிவீழ்ந்து நாமெலா
மிந்தக்கோல மாவதற்கோ விங்குவந்து சேர்ந்தன
முந்திமோடி போகுமாற்றுன் மூடமந்த ரத்திடை 29

தாவிநின்றுந் தானமின்றித் தளர்ந்தயர்ந்து தம்மிலே
மேவிநின்று நம்முதல்வன் மீளசூரன் விடுவனோ
வாவிபோகு மென்றுபட்ட வச்சமோடி றைஞ்சிடக்
கூவிஐயன் மாலிதன்னைக் கொப்பெனச்செ லென்றனன் 30

அந்தமாற்றங் கேட்டுமாலி பதிவிரைவிற் றேர்தனை
யந்தகன்முன் சேர்த்திட வசுரன்கண்டு சீறியே
முந்துமுன்றன் வீரங்காண முனைமுகத்து முத்திலேஞ்
சிந்துமென்றன் பாணமுன்னர் சிறியநிற்க வல்லையோ 31

சென்றசின்றுன் வேதன்யாகஞ் செய்யவந்த சிறுவநீ
யின்றெனோடு பொருதுகால யேமநாட னுப்புவே
னென்றுகூறச் சோடநீத் திர்துபிருதி வீச்சுரன்
நன்றுசொற்றை விந்தைவீர நகைநகைத்துக் கூறுவன் 32

பேதைதுட்ட வீணனுன்னைப் பெரிதிங்கெண்ணி நாடியிப்
போதுவிட்ட தானைநூற போர்புரிந்து அந்தகன்
பாதமுட்ட பாணந்தொட்ட பான்மைநின்னை யிக்கணஞ்
சேதமெட்ட செய்யுமாற்றந் தெரிவையென்று திண்ணென 33

தடைபடாத கோலுங்கொண்டு தாண்டிநின்று தானவ
னிடைபடாத தேரின்மீது மேற்றின்மீதுஞ் சாரதி
நடைபடாது வீயவிட்ட நானநோக்கி நலமிலா
னுடைபடாத வேறுதேரி னூர்ந்துவந்து மாயமாய் 34

விந்தைஜால பற்பலத்தால் வெய்யசூரன் பொருதநற்
சிந்தைநீடு தானர்காலன் றீரயாவு மார்ந்தவன்
முந்துமாயச் செய்கைகண்டு முனைமுனைந்த மர்செய
வந்துபாண மேழுநாலு மோய்ந்திடா திருந்ததால் 35

ஐயன்பிருதி வீச்சுர னனகண்டு சீற்றமாய்
வெப்பசந்த்ர பாணரண்டு விடுத்தொழிக்க வொன்றவன்

கையின்வில்லை பொடிபடுத்திக் காணுமற்ற கணையுறங்
கொய்யபாய்ந்து முதுகிளூடு கோலங்கொண்டு திரும்பிட 36

பிரிவுபட்ட மார்பில்சோரி பெருகிவெள்ள மோடமேபர்
திரிவுபட்ட சூரன்பிரமை திக்குபட்டு நின்றுமுன்
பரிவுபட்ட கண்கணிற்றீ பறக்கவோர் சக்ராயுதம்
விரிவுபட்ட பூசையாற்றி விடுப்பவோடி வருதலில் 37

அந்தகன்ற னுயிர்கப்ப வந்தகன்போல் வந்தவன்
சிந்தைகொண்டு பிரமஅத்ரம் சிலையிற்பூட்டிச் சிக்கிரம்
மந்த்ராபூதி யோதியேவ வானின்கோடி ஞாயிறு
குந்தவாறு சுடர்கொருந்தி யொன்னலன்மே ருக்கிவான் 38

நதிகுளித்து வீரன்றுணி நன்றுமுன்னர் நிருதனும்
விதிகுறைத்து பூமிமீது வீழ்ந்திறந் தழிந்தனன்
மதிகுறைந்து முதியருள்ள கைபசெய்தார் வாழ்க்கையின்
நிதிகுறைத்து வீயுமென்ற நேர்மைகொள்ள தேவரும் 39

வேறு.

சூழ்ந்தன சார்ப்பரித்துத் தூவினர் மாரி தம்பூ
தாழ்ந்தனர் சிலபேர் பொல்லாத் தானவர் துயர நீங்கி
வாழ்ந்தன மால்கவித்து வாயுரை வாழ்த்த வைபன்
வீழ்ந்ததற் சூரன் றன்பால் மோவிகன் மகிழ்ந்து 40

திண்புய வரக்கன் றீரம் தெரிந்திவன் போல்வா ரிந்த
மண்புயத் துள்ளார் யார்கொன் மதித்துசிந் தனையே செய்து
புண்புயத் தரக்க னாகம் பொடிபடப் பிளந்தாங் கென்பு
வண்புய வீரற் குற்ற வளந்தரா யுதங்க ளாக்கி 41

சருமங்கம் பளம தாக்கி தகுங்குறி நிறைகோ லாக்கி
நரம்பினைக் கயிறு மாக்கி நடுத்தலை கபாலந் தன்னைப்
பரம்பிய தட்ட மாக்கிப் பகுத்தவன் றசைக டன்னை
நிரம்பிய கூறு செய்து நிறுத்தனன் வெவ்வே றாக 42

தேவருக் கொப்பு காட்டித் திறமவிர் கபிலை யோரி
மேவிடுந் தருணைவந் திற்கும் விழையபரை பலமும் வானிற்
றுவிடுஞ் சந்த்ர னுக்குத் ததுமுக்காற் பலமுஞ் சுக்ர
தேவனுக் கிருப லஞ்சால் திரிபலந் தனைய திக்கும் 43

அக்கினிக் கிரி யிரண்டு மண்டர்கோன் குருவி னுக்குத்
தக்குபு ராறு மொன்றுஞ் சண்முகற் கிருமூன் றோடே
உக்கிர வீர பத்ரர்க் கொன்றுட னாறு சேர்த்தும்
முக்கிய வசுக்க ளுக்கு மூவிரண் டிரண்டு மாக்கி 44

நவஹிர கங்க ளுக்கு நான்குட னைந்துஞ் சேர்த்து
தவிர மாதி கட்குத் தாங்குமீ ரைந்து நீக்கி
பவிலா வருந்தி ரர்க்குப் பத்துட னொன்று மாக்கி
யவமிலாத் துவாத சிங்கம் காதி பழமு மொப்ப 45

பகர்விஸ்வ தேவதைக்குப் பத்துடன் மூன்று சேர்த்து
வகைபெறு தெய்வங் கட்கு வருமீ ரேழு லிங்கங்
தொகைதரு பக்கத் தாக்கித் தாங்கலை யாதி றுக்கு
மிகவரு மொன்று மஃதே வேந்திரர்க் கொன்றி ரட்டும் 46

பார்த்தின மகேந்திரன் பாகம் பத்துட னொன்பின் கூட்டிப்
பார்வதிக் கஃது மொன்று பலங்களோ பாக மாக்கித்
தார்பதி கொன்றை சூடித் தனியவ ரொருவ னுக்குச்
சார்வதாங் கொண்டு பின்றிக் கயங்கிடு கொக்க ரித்தான் 47

கரந்தெசனி கூப்பி ரண்டு கண்களி தருவி பாய
நிரஞ்சன வுள்ள னைந்து நெக்குநெக் குருக வன்பு
வரஞ்சன காதி நால்வர் மறைமுடி வுரைர வால
மரஞ்செறி நீழன் மன்னு மலரடி போற்றி நிற்க 48

வான்வருங் கங்கை திங்கள் வளரரு கரவு பொங்குந்
தேன்வருங் கொன்றை சூடுந் திருமு டழகி னோடு
மான்வருங் கரத்து லங்க வராந்தரு புத்ரி தாய
மீன்வருங் கண்ணி வாம மீதுற விடையி லார்ந்து 49

எண்ணிலாச் சிவ கணங்க ளிருபுறஞ் சூழ்க சாமப்
பண்ணுலா முனிவர் பாடப் பார்த்திப னயன்கொண் டாடக்
கண்ணெலாந் தேக மன்னுங் கபந்தி வீரங் கூற
மண்ணெலாம் போற்று கூடன் மதுரைவாழ் மருத்வ வள்ளல் 50

வாடரும் பயிர் தழைப்ப வந்திடு மாரி போன்பன்
பாடரும் பாணர்க் காகப் பாவமார் விறகு கொய்ப

வாடரும் காமு டைத்த பன்றருள் மறைசிலம்பு
தாடரும் பரமன் றேன்றி தயங்கிடே லென்று கூறி 51

அன்பவிர் பத்த நீயே யசுரர்தங் குழுவை நீத்து
முன்பமர் சித்தர் தேவர் முனிவரர் முதுநாள் பட்ட
துன்பலஞ் சிறை கடிந்து சுகமுடன் வாழ்க வைத்த
நின்பலங் கண்டே விந்த நிலமகள் பாரந் தீர்த்த 52

வேறு

ஆற்றலிஸ்புவி யின்பசனொடு மரியநாமயிங் கியந்தன
மாற்றுகோனிறை பாலனந்தவர் மாக்ஷிகண்டிரு ளித்தனை
சாற்றுமாவலர் நின்னைமாறுவர் தரணிபுரம்டிலை யாதலின்
போற்றினே சஜ்ஜனைப்போலவாழ்ந்திட புதியவக்ஷதை ரத்தினம்

கொண்டு வாழ்ந்துதனபாலசெட்டியெனுங்கோதிலாப்பெருமபே
பண்டுமாமறை துன்னுகாஞ்சிப ராவிசாதுகா மாக்ஷிதன் [ருடன்
தொண்டு செய்துவர மேனுமேனு முயர்குழ்கவாழ்குலைவயென்ன
கண்டுநேர்மொழி பட்டமையாவெதிர் காணுவீரன்க ளித்திட [கற்

தேவதேவிவன் வானமோடுபுவி சேருயாவர்துயர் தீர்த்தவன்
மேவுநாலுபத முற்றவன்குண வீறமட்டிலீஸ் வரியமும்
தாவுசுந்தர னைதாங்கடந் தரணிதன்னுமா சித்திகள்
யாவுமுந்துவி டேறிகோத்திரஞ் சைமூயமாமன மாற்றுவாம் 55

என்றுரைத்திடுத மமையாளுரை யேற்றுபிஞ்சகனு சம்பிறை
நன்றுரைத்தனை மன்னசத்திடைநகைநகைத்துகளிகூர்த்துயா [ள்
மின்றெழித்துமறு நாளின்மாமணமியற்றவெண்ணிவருமும்பர்க
சென்றுமாறுருவங் கொண்டுவந்துடனே சித்தம்வைத்துளம் பூத்

வேறு

வந்துபன் னூடு சுற்றி மாபல ராம னாகக் [தனன்
கந்தரம் விண்ப டர்ந்து கடற்றிரை மேய்ந்து ராமச்
சந்திர னிறம்போன் மீண்டு தன்னெதிர் கோடை மீதாங்
குந்திட வோடுங் காலை யோட்டுவான் மின்னி யார்த்து 57

பல்விலக் கணவித் வான்கள் பாடிடுங் கவிதை நேர
சொல்லுரு கனிந்தே பெய்ய துன்னிரு நீரி னூதை
பல்லணி பணைகா ரோட்டும் பாங்கரின் றுழனி வித்து
மல்கிடு சும்மை யாங்கு மருவிடு குரவை த்தகர் 58

ஒருங்குசெய் தொனிபா லேழு உவரிநீர் பழிக்கு நாடு
தருங்குலைக் கன்னி வாழைத் தழைத்திடு மாவின் சாறும்
பெருங்குலப் பலாவின் றேனும் பிறிதுபன் மலர்க டேனு
மருங்குலை சாலி பண்ணை யடைந்து வானீட்டு நாடு 59

வேதிய ரோம சாலை வேள்விசெய் மண்ட பங்கள்
போதிய யோக சாலை பொதுமக ளாடன கூடந்
தாதிய ரேவல் செய்யுந் தாளொலி மன்னு மாட
மாதிய வன்ன சாலை யார்ந்திடுந் தாக பீடம் 60

அலைதரு பொருளோர் பாலு மடர்வனப் பொருளோர் பாலு
மலைதரு பொருளோர் பாலு மணிநகர் பொருளோர்பாலுங்
கலைதரு பொருளோர் பாலுங் கவின்றரும் பொருளோர் பாலும்
விலைதரு மாவ ணத்தின் மேவுநற் பதியாய் வாய்ந்து 61

சீர்விசா லாவ திப்பேர் சிறந்திடு நகரைச் சேர்ந்து
பேர்விசா லத்தில் மற்றும் பிடியினில் பேறு சாந்த
யோர்விசா லத்தி லீகை யென்றுமே பழுங்கி டாத
தார்விசா லத்தி மார்பன் றனபதி நேர்ந்த வள்ளால் 62

சாற்றரு வாழ்க்கை கும்போ தரனெனு மகானு பாவன்
நோற்றருந் தவத்தான் வந்த நுவலருஞ் சீர்மை தாங்கி
மாற்றினி லுயர்ந்து பெற்றோர் வளமெலா மொருங்கு ருண்ட
பேற்றினி லுதித்தா ளாகப் பிறங்கிடு முறைப்ப டிக்கே. 63

நற்குடிச் சிறப்பும் பெற்றோர் நலிவினை யில்லா வண்ணந்
தற்குடி மனிதர் பேய்கள் துலங்கிடும் போர்க ளின்றி
பொற்குடி சக்தி யண்ணல் புழைக்கரன் சுப்ர மண்யன்
சற்குடி பேர ணிந்து தாழ்த்திடுஞ் சடப மற்று 64

நோய்முடஞ் செவிடா னூமை நுவல்பெருங் குற்ற மின்றி
யாய்தரு மற்றோ ரில்லத் தடுத்தடுத் தேகா ளாகி
பாய்தரு வேசை போன்ற பார்வையுற் றில்லா ளாகிக்
காய்தரு முன்முற் றம்போய் காளையர் தனைநோக் காது 65

அழகுற வலங்க ரித்த வதிதுயி லொருமை கோத்ர
குழலிபே ருண்டி நீட்சி குறளுரு மிதுப ருப்பஞ்

சழக்குறச் சிறுத்து மில்லாத் தகைவடி வுடைத்துக் கார்போல்
விழைவுபொன் கபில ரத்தம் வெண்ணிற மில்லா ளாகி 66

நால்வகை குணங்க ளீட நகைகுழு வற்றான் மான
மேல்வகை பகைமை கோபம் விதியுரு வழுக்கா றற்று
கால்வகை யூனா ளின்மை கட்குடி களவு பொய்மை
வால்வகை சிறிது மற்று வளநலம் படைத்தா ளாக 67

பெற்றவ ராணை நீத்த பெருமிதக் கடத்து நோக்கு
அற்றவள் பெரியோர் நிந்தை யகன்றவண் மனத்துக் காவ
லுற்றவள் மணஞ்செய் முன்னர் மற்றிடஞ் செல்ல லுன்னாள்
கற்றவள் கற்றபின்னர் கலைவழி நிற்பா ளாகி 68

மறுப்பொருந் தியகண் ணோடு மாலைக்கண் காயற் கண்ணும்
கறுப்புக்க ணிற்பு லிக்கண் கண்ணிலாச் செங்கனாற்று
வெறுப்புறு தூறு சென்னி விரிமுடி. பூவி றக்க
வறுப்புடை கடந்த செம்மை யற்றவ ளாகி மன்ன 69

இடிமுழக் குற்ற வார்த்தை யெழுபெருங் குரலி னோசை
கடிசிறு கண்ணு நீண்டு கனத்திடு நாசி சேர்ந்த
வடிவுறு புருவ மோடு வனப்பிலாக் குறிய காது
நெடியபல் வளைகழுத்து நீடிடு மறுவு மின்றி 70

மறுமுக வில்லைப் போன்ற வயிறிலா டனத்து மார்பும்
பெறுசுணங் குற்றாண் மிக்கப் பெருத்திடு மிடையு மற்றாள்
தொறுகலை நிதம்ப முற்றாள் துணியுசிர் வாய்கை கால்கள்
நிறஞ்சிவப் புற்றா ளன்ன நிகர்நடை யுடையா ளாகி 71

பத்மினி லக்ஷ ணத்திற் படிந்திடுஞ் சுப்ர தீப
வுத்தம விளமை யாளை யொருங்குட நிர்ண யித்து
வித்தக மாகு மட்ட விதமணத் தொன்றாம் ப்ரசா
பத்திய மணமு டிக்கப் பரிந்தனர் பரிவி னோடு. 72

பலவள மன்னு மாடப் பட்டின மலங்க ரித்து
குலைவளத் தேங்கு வாழை குறுத்தமுக் கிடுநற் பூகம்
இலைவளர் கற்ப கம்பே ரீச்சமற் றாகுக் துத்ய
நிலைவளர் பாங்க ணாட்டி நித்தில வரிசை காட்டி 73

வண்டுளே முழங்கு நீர்ப்பூ வனமுளே மகிழ்கொ டிப்பூ
தண்டுளே நிறைபூ தப்பூ தாங்கிடுங் கோட்டுப் பூவும்
பண்டுள சொன்னி லப்பூ பரவிடத் தொடுத்த மைத்தூக்
கண்டுள மகிழ்ந்து மற்றுங் கடிமணங் கமழ வைத்து 74

ஆரண விதிப்ப டிக்கிங் கமைந்திடு மாவி லைப்பைந்
தோரண வரிசை காலச் சுடர்கெழு தீப மேற்றிப்
பூரண கும்பம் வைத்துப் புதுச்சல கலசநாட்டிக்
காரண மறிய வானோர் கணமெலாந் திரண்டு நிற்ப 75

முப்புடைக் கனிம ரங்கண் முற்படப் பாளை பூக
மப்பிடை குலைகாய் வாழை யாதருங் கற்ப கத்தை
யொப்பிடை மரங்க ணட்டி யோர்தனி யாழியான் கோள்
கப்பிழை தருப்ப ணங்கள் கட்டவன் றன்றோர் மாகால் 76

இடர்பட விருது தூக்கி யிருபுறம் பவள மாக்கி
யடர்பட வருகங் செல்லா மணிநலப் பந்தர் கூட்டி
சுடர்படத் தீப மேற்றித் தோரண தொங்க விட்டுத்
தொடர்படு பூர்ண கும்பத் தொகையெலாஞ்சொருபமாக்கி 77

கற்பினைக் காட்டுங் கன்னி காணுவார் வாழ்த்த கங்கை
யொப்பினர் மறைக ளோதி யுதிரபல் லாண்டு கூற
கற்பக நாட்டு வேந்து கனிதிகர் கணிகை யோர்கள்
விற்பன பொரிக வே.விரும்பினர்க் குதவு தாழா 78

இடைக்குறை முல்லை வாழை யிவரொளைப் புகலக் கண்டார்
நடைக்குறை யற்றுள் செம்பொன் சிவிறிநீர் நல்க வேயு
முடைக்குறை யறுதி லோத்மை யொத்தவர் விசிறி யேந்த
கடைக்குறை கூடல் நாடிக் கசிந்திடு மளக பாரம் 79

முன்னருந் தவத்தி லோப முத்திரை யன்னார் கீத
வின்னிசை யூட்ட நல்ல விரைப்பனி நீரி னோடு
நன்னய சாந்தங் கன்னி நாரியர் கொம்மை பூச
அன்னமென் னடையாண் மன்ற லடைந்திடும்விந்தைகாட்ட 80

முழங்கின தடாரி பேரி முருகுடன் மாந்தை யோர்பால்
முழங்கின தக்கை பம்பை முன்னவர் தமருங் கொண்டு

முழங்கின படகந் தட்டை முடிவுட சின்னந் தாரை
முழங்கின தாளங் காள முதிர்வுற திசைகள் பத்தும் 81

ஆர்த்தன சங்கம் வான ராகிய மாறு வேடங்
கோர்த்தனர் கரங்கள் கூடக் குறித்தன ருள்ளத் தன்பு
சேர்த்தன ரிவர்கள் வாழ்க்கை சிறப்புற வென்றும் வாழ்த்தி
பார்த்தன வுறவோர் பண்பார் பரிசனர் மணத்தின் கோலம் 82

கொண்டணி வதுவை வாயிற் கொம்பனை சேர வேதப்
பண்டயன் வேள்வி சாத்ரப் பகர்முறை முதியோர் செய்து
எண்டிசை சீர்த்தி மல்க வினியமங் கலநாண் சாத்தி
மண்டணி செங்கை பற்றி வந்தவர் மனங்க ளிக்க 83

சுடர்கெழு சுடரில் வந்தோன் தூய்மண வாளி யோடு
சுடர்கெழு வேள்வி சாலை சுற்றியே வலஞ்செய் தின்பந்
தொடர்கெழு மாக்கம் பற்றித் தொன்முறைமுடித்திட் டேந்தல்
படர்கெழு வாகை சர்வ பாக்கிய முற்றோ ராகி 84

வருவிருந் தோம்பி வேதம் வழுத்திய விதிவி லக்குத்
தெருமுறை யநுச ரித்துத் தென்புலத் தார்க்க ளித்துப்
பெருமுறை யுரிமை தாங்கிப் பிரிவுட னிருக்க வைத்துக்
குருமுறை தேவ ராசி கூறிடும் பேறு மன்னி 85

மன்குலாச் சார நீதி மார்க்கஞ்சற் சீல மேய
நன்மறை யாக மங்கள் நாடபெற் சிலர் தேற
ஒன்னலர் தம்மைச் சாடி யுயர்பரி பால னஞ்செய்
தின்னவிர் செங்கோ லோச்ச வேற்றநா டிதுவே யென்று 86

ஒப்புமா வலவ ரேயு முலர்விலாச் சப்த தீவுட்
செப்புநா வன்ம ரத்தாற் றிகழ்பெயர் கொண்ட தீவில்
துப்புறு பரத கண்டந் தோன்றிய பூமி யாதுந்
தப்பிலா வளங்க டுன்னத் தாங்கிடும் பெயர்த்த தாகி 87

கழிலையிற் சிறப்பு டைத்து கங்கைதீ ரத்தே மல்கும்
பெயலைநல் வளங்குன் றாது பிறங்குநர்க் கமுத ளிக்கும்
பயிலுமோ ரார்ய சங்கப் பதியதாய் நிலைத்துச் சத்ய
மியலுமோர் ஞான மூட்டி யிகபரச் செல்வ மீயும் 88

அலைகொழி வரனை யோடே யசியெனு மாறு சேரு
நிலைதனி லிருப்ப தாலே நிகழ்வார ணாசி யென்பார்
சிருபலை மகளாய்க் கோலஞ் செய்தவன் சிந்தை நோக்கி
கலைதருந் தவத்து னீண்ட காலமாற் றிடவெ வர்க்கும் 98

வரமுவந் தன்பு செய்யும் வரைவிலான் மாக்ஷி நீடுங்
கருணையோ டின்ப மேயக் காக்ஷிதந் துளமகிழ்ந்து
சிரசினை யசைத்த காலை செவிகுழை மணியு மொன்று
பரவிட மணிகர் ணிகப்பேர் படைத்தனர்க் கட்டங் கூட 90

ஐயனும் விஸ்வ நாத ராலயங் கட்ட மம்மை
செய்விசா லாக்ஷி யோடு திகழ்தண்ட பாணி செவ்வேள்
நையுமென் போல்வார்க் கன்பு நனிதர வாழ்க்கை கொண்டு
துய்யநற் றலமாங் காசி தொன்னகர் துயர்த விர்க்கும் 91

பகிரதன் றவத்தித் தோன்றிப் பரவச முற்று நீடி
மகிதனில் வந்து தோய்ந்தார் மாசெலாம் பொன்ற வோட்டி
நகிபிமம் புகுந்த ணிந்த நற்பெயர் நல்க விந்த
முகிவிளத் தூய்மை செய்ய முற்படும் வங்கையா லாங்கு 92

முந்திடு நியமம் பூண்டு மூழ்கிடுங் காலை தங்கள்
சிந்தையில் வேறு தீர்த்தஞ் சிந்தனை யாக வெண்ணப்
பந்தமாம் வினைக ளாட்டும் பலனிலாத் தீர்த்த மூழ்கச்
சிந்தனை யதனைச் செய்யச சீரெலா மளிக்குங் கங்கை 63

புண்ணிய தேய மன்றி பொருந்து வேற்றூரி னின்று
நண்ணிய வெவரே யேனு நற்குலம் பிறவா ராகி
யெண்ணரும் பற்குலத்தி லிழிந்திடுஞ் செய்கை வாழ்க்கை
புண்ணவிர் குலத்தா ரேனும் புலைகொலை பொய்க ளாதி 49

புரிந்தவ ரெவரே யானும் பொன்றிய கடத்தோ ரன்பு
பொருந்திடத் தன்னில் வந்து புங்கவ நாடு சேர்க்குந்
திரிந்துமூ வுலக மன்னுந் தீர்த்தம்பல் செறியும் வேத
மிருந்திடு சூக்ம மாக விளங்குபூ சனைக ளாற்ற 95

புகரிலாச் சகல தேவப் பூசனை யாற்றும் பேறு
மிகவருஞ் சகஸ்திர பாக விசேடனம் பரவுங் கங்கை

அகமுறுங் காசி யென்னு மற்புத தேவ நாடு
நிகர்விசா லாவதிப்பேர் நீடுநற் பதிபு ரக்க 96

கசியபன் றிதியோ டாற்றுங் காதலா லில்ல றத்தே
யுசிதமாய்த் தோன்றி யாது முன்னிடு முன்ன ராக்கும்
நிசிதமா மாற்ற லுள்ளான் நிரம்பிய சிற்ப நூல்கள்
கசிதமா நிபுண னாகும் கண்ணிய மயனைக் கூடி 97

பதியெலாம் புதுக்கி மேலாம் பதித்திடுந் திருத்த மாக்கி
விதியெலாங் கடத்தி வைகும் விண்ணவ ரொருங்கு கூடி
மதியெலாங் கவரு ரத்ன மணிமுடி சேக ரித்து
அதிபல ராசி கூற வந்தணர் கோஷ்ட மன்ன 98

நான்கினை யெட்டி ரட்டு நலமலிர் தானஞ் செய்ய
வான்கவிர் பேரி யோசை வழங்கிட வரங்க ளேற
தேன்றுமி துமிக்கு மாலை திகழ்தர நீதி யாஞ்செங்
கோன்முடி தரித்து வானோர் குழுவென விருக்கை சென்றார் 99

வேதியர் முனிபுங் கோர்கள் விருந்தினர் விழைந்த வெந்தச்
சாதியர் கண்க ளித்தோர் சார்ந்தனர் தமதி ருக்கை
நீதியிற் பிறழா வண்ண நிலைத்தன னரசி யோடு
மேதினி யுயிர்கட் காத்து விழைந்தனன் விதித்த வாறே 100

மறைகுறை வகற்றி யோது மறையவர் காதல் சேரு
நிறையவர் செங்கோன் வண்மை நிதியவர் பொருட்டு மாத
முறையொரு மூன்று மாரி முழாவமர்ந் தினிது பெய்யக்
குறையிலாக் குடிக ளுள்ளங் குதூ கலங் கொள்ள வாழ்ந்தான்

இவ்வணம் வாழ்கு நாளி லீஸ்வரக் காக்ஷி யெய்த
செவ்வணை யில்லா ளோடு திரிகர்ண சுத்தி யாக
தெவ்வலில் கங்கை கட்டத் தீர்த்தமும் ஞான வாவி
எவ்வந்தீர் பலது மாடி யிணையிலா வன்பு தாங்கி 1:

துண்டிவி நாயக கன்றாள் தொழுதடி போற்றி ஸத்ய
தண்டபா ணிப்பா தத்தைச் சார்ந்துபல் லால யங்கள்
அண்டினை முறையாற் பூசை யாற்றிநாற் பத்தி ரண்டு
பண்டினை லிங்கமேலாம் பகர்விஸ்வ லிங்க பூசை

புரிந்தருட் காக்ஷி கர்ணப் புலனெலா முருக வேத்த
சரிந்தகொல் புலித்தோ லாடை சந்திரன் கங்கை கொன்றை
பிருந்திடு முடிது லங்க ரிஷபவா கனத்தி லேறி
வாருந்திடு மிருவர் முன்னர் மாதுமை பாகங் கொண்டு 104

உயிர்தொறு மொளித்த கள்வ னுவந்தருங் காக்ஷி யீய
வயிரறு முள்ளத் தோடு கடலமு துண்டாய் போற்றி
செயிர்தரு பிரமன் மற்றோர் தேடிடும் பொருளே போற்றி
யுயும்வகை காட்டு ஞான வொருவனே போற்றி போற்றி 105

முத்தனே போற்றி ஞான முதல்வனே போற்றி வானோ
ரத்தனே போற்றி பண்டை யயனரி தேடிக் காணாச்
சித்தனே போற்றி யன்று திரிபுரம் பொடிப டுத்துங்
கத்தனே போற்றி வந்த காமனை யெரித்தாய் போற்றி 106

மாதங்க வரைவ னீத்த வண்பதி போற்றி யேழும்
மாதங்க குகனைத் தந்த வள்ளலே போற்றி தெய்வ
மாதங்க வைத்தாய் போற்றி வனனரை வைகு மன்பின்
மாதங்க முடித்தாய் போற்றி மறைமுத லவனே போற்றி 107

வெண்பொடி யாக மேனி விமலனே போற்றி யன்னங்
கண்படுந் தில்லை யாடுங் கழலுடை பரனே போற்றி
புண்படுந் துயரம் போக்கும் புராந்தக போற்றி யென்று
மண்பட வீழ்ந்தி றைஞ்சு மகிபநின் மனையா ளோடு 108

பிரிதுற வாழ்வீர் புத்ரப் பேறடைந் துய்வீர் பின்னர்
அரிதுறும் பதவி முத்தி யடைந்திடு முன்னர் செங்கோல்
சரிதர வோச்சி காலுந் தருமக வந்த தாலும்
தெரிதரு மஹாம கச்சத் திரியராங் குலம்வி ளங்கி 109

மன்னிவாழ்ந் திடுவீ ரென்று வரம்பல தளித்து மையன்
துன்னிய வுமையா ளோடு சொற்கண மறைந்தா னிப்பால்
கன்னியாஞ் சுப்ர தீபக் காதலி மனங்க ளிப்ப
வின்னிய சுகத்துட் ப்ரீதி யீச்சுர னிருந்தா னுமால் 110

குடிகளை யோம்பித் தக்கங் குறையெலா மகற்றி வாய்க்கு
மிடிகளை யொதுக்கி வந்த வினைத்துயர் தொலைத்துக் காமக்

குடிகளை நீக்கி வல்லக் குணமெலாம் புகட்டி யுள்ளப்
படிகளை யாண்டு சீர்சொற் படிவரு மில்ல றத்தின் 111

ஈங்கிளை யில்லா வான வீட்டமே நிலைவ திட்டர்
நூங்கிளை கிழவி யன்ன நுவலரு மன்பின் பஞ்ச
பூங்கணை கிழவ னன்னான் புணைமயல் ரதியாண் மான
பாங்கணைந் திருந்து கற்பப் பயன்றரு கருவி னூடே 112

பனியொரு பாதி சுக்லம் பண்டியிற் புகுந்தி ருந்து
நனிபெற திரண்டு மேலா நளினமாய்ப் பரவி நின்று
துனிவகை யற்று நாளுந் துலைதரு மவய வங்கள்
தனிதரும் பூர்ண கற்பந் தாங்கியொன் பானொன் றாகும் 113

திங்களுஞ் செல்ல மாண்பு திகடரு முகூர்த்தந் தன்னிற்
திங்களுக் கொளிசெய் கோடி சேர்ந்தன சேயன் றோன்ற
மங்கள மாட்சி வீற மனையொடு தமர்க ளிக்க
தங்குளங் களிக்கக் கும்போ தரனுடன் பெற்றோ ரீட்சி 114

அலையிலாக் கடலி லாழ்ந்தாங் கருந்தவப் பயனான் வந்த
நிலையிலா அலர்த மக்கு நேடினார் தமக்கு முண்மை
கலைமறை பயின்றா ருக்குங் கடுமைசஞ் சலத்தா ருக்கும்
கொலைபுரி வறுமை நோய்மை கொண்டவர் தங்க ளுக்கும் 115

பேரவா வேலை வற்றப் பெருநிதி தந்து மண்ணி
லேரவா மணமற் றார்க்காங் கெழின்மணம் பலது மாக்கி
கூரவா கோவி தீர்த்தம் கொம்பனை யார்க ளாக்கம்
சீரவா கொண்டு செய்துச் சிறப்புடன் கிழமை கூற 116

தக்கவான் மறையு ணர்ந்த சகலவல் லுநரைக் கூவி
யிக்கன வந்து தித்த வெனதுசே யருமு கூர்த்த
மிக்கவே யுரையு மென்று வேண்டினன் குறித்து மன்பு
புக்கவே சுநேந்தி ரப்பேர் புகன்றனர் மகிழ்ந்தி ருந்து 117

பொன்னென வளர்த்துப் போற்றிப் பூமண மென்னக் கண்ணின்
மின்னென வுள்ளங் கொண்டு மீசுரம் பயிலும் வாகை
துன்னெடும் பணிக டொட்டு சுடிகையைக் கழித்த லாதி
நன்னெடு நேர்மை யாலே நாளுமே யன்பு காட்டி 118

மூவிரு மாத மாக முலைப்பிர சார ணஞ்செய்
தேவ ந பருவட் பத்து மின்புடன் செய்யும் யாவுந்
தாவிய பதத்தி னோடு தக்கவன் புடையே மல்கி
மேவிட வளர்த்து வையம் விரும்பிட வைந்தா மாண்டில் 119

சீரறம் பொருளோ டின்பஞ் செப்பரு வீடுஞ் சேர்த்து
மீபுறம் நல்வி சைக்கு வித்தென விளங்குங் கல்வித்
தாவுற சகல ஞானந் தக்கவா ரியன்பாற் சேர்க்க
கோவுற வித்யா ரம்பங் குயிற்றின ரிளமார்த் தாண்டன் 120

வளர்வது போல்வ ளர்ந்து வளப்புறப் பெருகுங் காலை
யிளம்பிடி சுப்ர தீப வேந்திழை கருவ டைந்து
வளம்பெறு முறையே வீற வரிசைகொ லாறு புத்ர
ருளமது களிக்கப் பெற்று ளொருமக டன்னை யீன்றாள் 121

வந்தவோ ராறுவ ருக்கும் வளவுடு லக்கி னங்க
ளந்தர வோரை நோக்கி யந்தணர் குறித்த வாறு
பந்தசு தரிச னன்சு பாவுவ டங்கண் மற்று
நந்தனி மணிமே கன்சு நாததன் பலியென்று 122

சீர்பெறும் பிள்ளை நாமத் திருவமைத் தொப்பில் லாளுக்
கேர்பெறுஞ் சுமதி நாம மிசைத்தெழி லாகச் சூட்டிப்
பேர்பெறும் வகைவ ளர்த்துப பிறங்குநல் பணிகள் பூட்டித்
தார்பெற வலங்க ரித்துச் சதிருடன் வளர்க்குங் காலை 123

செல்வர்க ளெழு பேருஞ் செலவிலாச் செல்வ மோர்ந்து
கல்வகை பருவந் தாங்கி நால்வகைச் சேனை கூட்டும்
வில்வகை யாவு மார்ந்து விழையனை கோத்ர மூவா
வெல்வகை வமிசந் தன்னில் விளங்கிடு மகடூஉ பேசி 124

சுகேந்திரன் றனக்கு கந்த சுசீலைபா டன்னை சீர்பூ
சுமேந்தரசு தரிச னுக்குச் சுவர்ணரே கைப்பே ராளைத்
தமேந்திர சுபா வுக்குத் தகுசுநா பிகையென் பாளை
வமேந்திர மணிமே கற்கு மாயாவ திப்பே ராளை 125

விடங்கனுக் குகந்த நல்ல விசித்திர காந்தி தன்னைத்
தடம்புய சுநாத னுக்குச் சந்திர லேகை தன்னைப்

படமுயர் பலிய னுக்குப் பங்கஜ வல்லி யாளை
யடர்கடி மணம்பு துக்க வமைந்திடுஞ் சுபதி னத்தே 126

பந்தின ருறவோ ரேய பாங்கினர் வரிசை மேய
முந்தின வதுவை வாய்ந்த முகூர்த்தபைந் தொடிக ளாரச்
சந்திர குடைநீ ழற்றத் தனித்தனி யரசு கூவி
இந்திர போக போக மென்னவே துலங்கக் காட்டி 127

• வேதனை நிகர்த்தார் நல்ல வேள்வியாற் றிடவு முள்ள
வேதனை யற்றார் கூடி மென்மலர் மாலை சாற்ற
வேதனை யிங்கொப் பில்லா வின்னவிர் மலர்க ளேவ
வேதன வரிசை யோடு விமரிசை மணமு டித்தார் 128

வேறு

அடல்திண் டோளா ரணிமண மன்ன
பிடருளைப் புரவிப் பெருரத நடத்திக்
குடர்கொளு வேலார் கும்போ தரனின்
றிடவமி சத்தே சேர்ந்திடுந் தக்கோன் 129

சுந்தர சேனச் சுகீர்தன் றனக்குக்
கந்தர சங்கு காரிகை தன்னை
யந்தர விபுத ரார்த்திட மிக்க
மந்திர முறையே மணமுடித் திடவான் 130

அரம்பையர் மானு மரிவைய ராடக்
கரம்பயில் வீணைக் கன்னியர் பாட
வரம்பையி விருபுற வனிதையர் நீடப்
பரம்பரை யுறவினர் புந்தினர் நாட 131

கொண்டா டிடசெங் கோன்முறை யரசர்
செண்டா டிடசெந் தேன்மலர் கொண்டு
பண்டா டியவீச் சுரனின் பயனால்
திண்டா டினரே சேண்பகை யசுரர் 132

மறையோன் பண்டு மகத்தினில் வந்த
முறையோன் மகற்கு முடித்திடு கடிமண
நிறையே படிந்த நேர்மையின் குரைப்ப
தறையே புகழ்வி சாலா வதிப்பேர் 133

பட்டணங் களியாட் பட்டன மென்றார்
திட்டண மணிசேர்த் திட்டன மென்றார்
விட்டன சேக்கை விட்டன மென்றார்
கிட்டன கண்ணுறங் கிட்டன மென்றார் 134

இத்தகை மெய்த்தினர் வித்தக வைத்து
நத்தும ணத்தினர் சித்தமு டைத்த
சத்துநி ரைத்தன ரித்தரை யத்தே
முத்துவ டத்தினர் பத்தியு டைத்த 135

கடிமண மாற்றிய காளையர் மீனக்
கொடிமக னென்னக் கொடியிடை ரதியா
ளிடைபடு சுகத்தி னிடைபட விருப்ப
நடையடு மேக குடிமைதாங் கினரே 136

தாங்கிந லாற்ற றழைத்திட வாழ்க
தீங்கவிர் தேவர் செழித்திட வந்தகன்
பாங்கினை யொழித்த பண்புவி யீச்சுர
னாங்கவிர் வினையா லடைந்தனன் விரனே. 137

விண்ணவர் நாடு விழைந்தவன் றுயரால்
கண்மணிப் புதல்வர் கண்கணீர் கலுழ்ந்து.
புண்ணுளந் தாங்கிப் புலம்பிபின் றேறி
யெண்ணிலாக் கிரிகைக ளியற்றின ரம்மா 138

இயற்றிய சுரேந்திர னிளவல ரோடு
செயற்றிற மன்ன சிறந்திட வாழ்ந்து
கயற்றிர ளாருங் கண்ணிய நாட்டைப்
புயத்திறந் தாங்குபு புண்ணிய ஞானன் 139

ஆனவ னுரிமைபட் டாபிடே கத்துள்
வானவர் புகழ மறுதரு முறையால்
கோனவ னென்ன குடிகளை யோம்பி
தேனவிர் சுவையால் செலுத்திடச் செங்கோல் 140

மறையோ திடுவார் வனமுலை கற்பார்
நிறைகோ லாளர் நெறிதனக் கூற்ற

குறைவிலா வானங் குலவிட வானந்
தறைபா தளத்துந் தங்கின புகழே 141

புகழ்பல விருந்தும் பொன்மணி யிருந்தும்
இகழ்பல விருந்துஞ் செல்வமி ருந்தும்
நிகழ்பலப் பேறு நீடியி ருந்தும்
மகவிலாத் துயரான் மனநோய் மலிந்து 142

வரும்பொரு ளுரைக்கு மந்திரி மாரை
விரும்பியே யழைத்து மிக்குடை யாரே
அரும்பொருள் யாவு மடைவுற விருந்தும்
பெரும்பொருள் புத்திரப் பேறிலாக் குறைக்கு 143

போக்கிப் புவிப்பழி பொன்றிடச் செய்யு
மாக்கஞ் சிறிதிங் கறைந்திடு வீர்நன்
ஞேக்க மியலும் நோன்புறுந் தரும
மீக்குறச் செய்யுமின் மீண்டு முரைப்பார் 144

வேறு.

தருமமே யொப்பி லெந்தை தனிப்பரன் வடிவ மாகுந்
தருமமே வேட்ட வர்க்குச் சௌக்கிய மனைத்து நல்குந்
தருமமே தனிக்க ஞான்று தக்கநற் றுணையாய் நிற்குந்
தருமமே தவமுஞ் செய்தாற் றகவிலா மகவுண் டாமால் 145

அம்மொழி யாற்ற வாகை யரசனுஞ் சிரவ ணித்துச்
செம்மைகொ ளமைச்சை நோக்கித் திறமிது சொல்வா னுவான்
நம்மொழி தவாது நீரே நாட்டிலோர் துவஜ நாட்டி
யிம்மெனப் பலருங் காண வெழின்முர சறையச் செய்மின் 146

வேந்தனின் னணமு ரைக்க வெழிலறத் துவஜ மேற்றி
தீர்ந்தநற் பேரி யார்ப்பு செய்தனர் பலருங் காணச்
சேர்ந்தன ரேழை மாந்தர் திரடிர ளாக வுள்ளங்
கூர்ந்தவோர் விருப்பால் வேந்தன் குறைவிலா தறஞ்செய்வானுல்

வதுவையென் றுவந்தோ ருக்கு வழங்கினன் பத்து நூறு
கொதுவையென் மனையென் ஞேர்க்குக்கொடுத்தனனிருபா னூறு
கதுவென முறையிட் டோர்க்குக் கனிந்தன னூறு னூறு
மூதுமறை யுணர்ந்தோ ருக்கு முகமன யளவில் பொன்னும்

ஆற்றின னறமு ரைத்த வரும்பொருள் நின்ற செல்வஞ்
சாற்றிய வமைச்சர் பாலே தங்கிட வைத்து வேந்தன்
போற்றிய வுறவின் கேள்வர் புரைபிறி தொரீஇ நீட
டாற்றினி லுயர்ந்த வண்ண மனைப்புல னகிழ்வு மேய 149

புண்ணிய பாவ நீத்துப் புகழ்பெரு பாசை நீத்து
வண்ணமா வுடைக ணீத்து வளமிகும் பணிநி நீத்து
மண்ணைபஞ் சணையாய்ச் சேர்த்து மாவுரி தன்னைக் கோர்த்து
திண்ணமாய்த் தவத்தை நோற்று ஜெயம்பெற நின்றான் மன்னன்

இன்னண முறுதி மேய விருந்தவ மியற்றுங் காலை
முன்னற முணர்ந்த மேலா முனிவர்க ளொக்கி யைய
வென்னினைந் திங்கு போந்தா யெழிற்றவ மாற்றி நின்றீ
ரன்னிலை யெம்பா லுண்மை யறைகுவை யென்ன வைய 151

என்பின ரரசு தாங்கி யெழிற்குடி யோம்பி மிக்க
வன்பினு ளமர்ந்திங் கெற்கு அந்தியக் கடன்மு டித்துத்
துன்புறு நரகிற் செல்லாத் தூய்மைபாற் றிடுவ தற்குப்
பண்பினி லுயர்ந்த புத்ரப் பாக்கிய மின்மை யாலே 152

கொண்டவிக் கோல மென்னக் குயிற்றிட முனிபுங் கோர்கள்
வண்டயன் படைப்பு தொட்டுப் பயின்றிடு மறைக ளோதக்
கண்டவர் பவம றுக்குங் கடிநகர் காஞ்சி மேவி
தொண்டணி தவமு ஞற்றச் சுதனணிப் பெறுண் டாமால் 153

என்றலு மோகை கூர்ந்து ஏழின்முனிப் பாதம் போற்றிச்
சென்றனர் வணங்க டத்திக் திரைபுனல் கங்கை மூழ்கி
நின்றனர் விஸ்வ நாதன் நிறைகழல் போற்றி யார்த்து
மன்றலங் குழலா டிவ்ய மலரடி சென்னி சேர்த்து 154

சிவணுறை தலங்க ளெல்லாஞ் சென்றுதஞ் சென்னி தாழ்ந்து
அவநெறி விட்டு மன்ற லாடுவா னருளைப் பெற்று
நவமணி கொழிக்கு வாகை நாடுபொன் முகரி வாய்ந்த
பவமறுத் திடுங்கா ளத்தி பதியினைக் கண்டா ராமால் 155

# இரண்டாமத்தியாயம்.

திருவளர் வெற்பிற் சேர்ந்து செம்மலர் வந்தோன் றந்தோ
னிருவரு மறியொண் ணாத வெம்பிரா னடிக ளேத்திக்
கருவரும் பவந்தொ லைக்கக் கண்ணீர்கம் பலையாய் நின்று
பெருவர மளிக்க வேண்டிப் பிரிதுட னன்று கொண்டு 156

சாலநாட் கழிந்த பின்னர் சகலரு மவணி னீங்கி
நாலுமா முகனுங் காணு நாயக னுறையு மேலாஞ்
சீலமா ரினிய வொற்றி திருநகர் தன்னைச் சேர்ந்தே
யாலம துண்டோன் பாத மண்மையா லிறைஞ்சி நின்று 157

அம்பிகை பாதம் போற்றி யளவிலாத் துதிக ளாற்றி
வம்புலாஞ் சோலை நீந்து வளமிகுஞ் சுற்றஞ் சூழ
வெம்பெரு மாட்டி மிக்க வெழிலுறு மயிலாய் நின்று
தம்பெருங் குறையை நீக்கத் தலமதை யடைந்து தேனுல் 158

நனைமல ராவி யாடி நாயகன் நீற்றைப் பூசி
புனைவதோ ராக்கம் பூண்டு பொற்புறக் கோயில் சென்று
வினையெலாந் நீக்கு நாதன் விரைகழற் சிரமேற் கொண்டெண்
ணினைவெலாந் தவிர்த்து மாங்கே நின்மல மாகி நின்று 159

பிஞ்சக னுறையுங் கோயில் பிழையிலான் சென்று சென்றே
நெஞ்சினி லுவகைப் பூத்து நேயமா யாடிப் பாடி
அஞ்சலித் தெழுந்தங் கார்த்து அன்பினுல் மிகவே நைந்து
செஞ்சர ணிரண்டு நாளுஞ் சிரசணி யாகச் சேர்த்தே 160

முப்புர மெரித்தோன் மேவு முகில்பயில் சோலை வாய்ந்த
வப்பதி தனக்கு மேலா மெழிற்பதி யிதே யாமாற்
செப்பருஞ் சித்தி ஞானச் சிவமுனி யோர்கள் போற்று
மொப்பரு நகராங் காஞ்சி யொளிநகர் கண்டா ரன்றே 161

மாதவ மிழைப்போர்க் கென்று வதியருள் சுரக்கு மேலாம்
மாதவம் போக்கி யென்று மகிபனை யடையச் செய்த
மாதவி கட்டை போந்து மகிதல மதனில் மிக்க
மாதவன் கட்ட மான மாண்மைகொள் காஞ்சி புக்கு 162

மலைவளர் வாச நீடு மலர்மர மணிகள் சேர்க்கு
மலைபுனற் கம்பை யாடி யருந்துகில் புனைந்து மோக்க
நிலைபயி னீறுபூசி நெடுமுகில் தொடுதண் கோட்டு
தலைபயில் கோயிற் புக்கித் தழைத்திடு முள்ளத் தோடு 163

பண்ணிய பேந்து கையன் பதத்தினை யருச்சித் தேத்திப்
புண்ணிய மூர்த்தி யாகும் புலவனைத் தொழுது பக்கல்
நண்ணிய வம்மை யோடு நாதனைக் காங்கு வித்து
எண்ணிய முறைகள் செய்ய வேத்தினர் புலன்க ளைய 164

கண்கணீர்த் தாரை சோர கைம்மலர் முடிக விக்கப்
பண்ணவி ரிசைசால் நல்லப் பதிகமே பாடி மேலா
விண்ணுலக மும்பர் மற்றோர் வேதன்மால் விரவிக் காணு
வண்ணலார் தம்மைக் கண்டு அஞ்சலி செய்து முன்னாள் 165

பிட்டினுக் குவந்தாய் மன்னன் பிரம்படிப் பட்டாய் கட்டை
கட்டினுக் கினிமை சால கவின்முடி காட்டித் தோழன்
திட்டினுக் கருள்சு ரந்தாய் திண்ணனார்க் கினிமை செய்தேன்
மட்டினுக் கருணைச் செய்யா வகையெனு வென்றங் கேத்தி 166

உலகுறு முன்ன நின்றா ளும்பர்க ளோத நின்று
ணிலகுறு வாமங் கொண்டா ளெம்பிரான் கண்க வித்தாள்
அலகிலாக் கருணை யாறு ளங்குகா மாட்சி யாகி
யுலைவுபே ரம்மை பாத வுரிமையா லடிப ணிந்து 167

இகத்திற மளிக்குந் தாயா யிறைவனுக் குகந்தாய் நீயெம்
மகத்திற முணர்ந்தாய் வேண்டு மடியருக் கருள்சு ரந்தாய்
மகத்திற முதல்வி யென்று வாழ்த்திப்பின் வகைசேர் நல்ல
* சகத்திர நாமஞ் செப்பி தாழ்ந்துதங் குறைய தாகும் 168

புத்திரப் பெரும்பே றில்லாப் புரையெலாம் புகன்று நீங்கி
நித்திரை செய்ய வுன்னி நிகழ்வகை சென்றார் பின்னும்
பத்திமை யுற்றா ராகும் பதினறு பேர்க ளுக்கு
சத்திகா மாட்சி தோன்றி சாற்றுவ ளன்பு பொங்க 169

அஞ்சுளர் தவிர்வீ ரெம்பா லன்புடை யுளத்தீர் வேத
மிஞ்சனு நிறைப்பா லுண்மை விதியுணர் மேலோன் தெய்வத்

தஞ்சமே கொண்ட வள்ளால் தருமக மாற்ற வல்லான்
கிஞ்சியி லுறுதி காணுங் கிளர்பொறி யடக்கு வண்மை 170

சீர்நிலை காட்டுந் தீம்பாற் சிறந்தன ளுகு மேன்மை
பேர்நிலை கோட்டு ஞானம் பிறங்கிடு முனிவன் றேடி
ஏர்நிலை கூட்டு வேள்வி யியற்றுமி னக்காற் றோன்றும்
நீர்நிலை·கோட்டத் துள்ளே நிறைந்திடு மமிர்தந் தன்னை 171

இன்புடன் கொடுக்க வாங்கி யெண்மரும்'புசித்த பின்னர்
யன்புறு புத்ரப் பேறிங் கடைகுவீ ரென்று ஞற்றிப்
பொன்பயி லம்மை நீங்கிப் போயின ளுறக்க நீத்து
மின்பயி லரசக் கோத்ரம் விழைந்தவ ரன்பு பொங்க 172

அளவிலா னந்த வேலை யழுந்தின ரம்மை யன்பிங்
குளவகை யோர்ந்து தாழ்ந்தா னுவகைகொண் டாடி நின்று
குளறுத லானைக் கொண்டே கொம்மையாள் கருணை சொல்லி
வளநலக் கம்பை யாடி மாற்றிலாப் பொன்ன ணிந்து 173

செய்கடன் முடித்து ஞாலஞ் செய்முறை யாய்வ ணங்கி
யுய்வகை யுணருங் காலை யும்பரி சொற்ப·னத்தே
பெய்வகை யருளைக் கொண்டப் பெருங்கலை கோட்டுப் புங்க
னெய்திடக் கண்டா·ரம்மை யிணையிலாக் கருணை விண்டார் 174

விண்டவர் முனிவன் றண்டாள் விரைமல ரருச்சித் தேத்திக்
கொண்டனர் களிப்பு மேன்மை கூறின மம்மை மாற்றம்
பண்டவிர் வினையி னீங்கிப் பலுகிடச் சந்த திக்குத்
தொண்டணி யாக மாற்றச் சொல்லின ரடிகள் வேண்டி 175

கள்ளவிர் கடுக்கை வேணிக் கடவுள ரடிக டாழ்வார்
பிள்ளையின் கில்லாப் பாக்யம் பெற்றிருந் தென்சி லாக்யும்
கொள்ளவிர் புத்ர யாகங் குயிற்றிட வமைகா மாட்சி
விள்ளரு மொழிப்ப டிக்கே விழைத்திட வலக்கு மென்றார் 176

அறைவன கேட்ட மூற்புங் கவனுள மகிழ்ந்து வேண்டுங்
குறைவிலா வேள்வி செய்யக் கோமகப் பொருள்கள் சேர்த்து
நிறைவுறு விண்ண வர்க்கு நிறைத்திடு யாகஞ் செய்தார்
மறைபுகழ் காஞ்சி மேவும் மாதவி மொழிப்ப டிக்கே 177

உதித்திடு மிவர்ப்பா கத்தை யுத்தமி யெண்ம ருக்கும்
விதித்திற லோட ளிக்க விரும்புபு பத்தி நீட
நிதித்திற மாக வாங்கி நினைந்தமை தாள்க டன்னை
பதித்திடு முள்ளத் தோடு பருகினர் பருவப் பெண்கள் 178

வாலணி யமிர்தந் தன்னை வளமுட னுண்ட பின்னர்
சாலதம் புருடர் கூடச் சதிருடன் சுகித்தி ருந்து
சூலமர்ந் திருந்து காலஞ் சூழ்ந்திட வெழுவர் தங்கட்
பாலுரு மனைக ருள்ளே பகர்ந்திடு மிருவ ருக்கு 179

செப்பிடு முறையே மூன்று சேயர்க ளுதித்தார் தம்பா
லொப்புயர் சோத ரிக்காங் குவந்தன ரெண்ம கார்க
ளிப்புவி யுதித்த சேயர்க் கியற்றிடுஞ் சடங்கால் நற்க
ளிப்புறப் பருவந் தோறு மிசைத்தணி சகல சீர்மை 180

முனிவர்க ளோடுந் தாமு முன்புற வெய்தி நாமங்
கனிவுடன் சூட்ட வேண்டக் கரணலக் கினங்கள் பார்த்து
தினிபிர போதன் சுப்ர தீகரன் ஜயகான் சாந்தன்
நனிதிகழ் நந்தன் வைரி நாபன்சீர் சகுண னென்னும் 181

வண்சுப சீலன் பந்து வன்மைட வன்விக் கிரமன்
மன்கம லலோலன் வஜ்ரன் வைரங்கன் கடிக னென்றும்
துன்னிடு நாமஞ் சூட்டித் துகளிலாப் பெண்கு றின்றப்
பொன்னிகர் சேய ருக்குப் புகலரும் போஜன் பூதி 182

சாதனன் அம்பலத்தன் றகுஅதி காந்தன் ரூபன்
போதக வாம லோசன் புகழ்ஜய சிம்மன் மற்றோன்
பாதக மில்லாப் பிரதா பகரனு நாமஞ் சூட்டித்
தோதக கோத்ர நீடச் சூழ்ந்தனர் சொல்லு வண்மை 183

இருடிக *ளாது நான்குக் கிருந்திடும் பெயரமைத்து
தருமணி யாசி கூறித் தருகலை யோது வித்து
வருமுறை காண்பே மென்று வாழ்த்தியே முனிபுங் கோர்க
ளருநிறை யாசிர மத்தி லடைந்திடச் சென்றா ரிப்பால் 184

முனிவர்க ளாசி யாலே மொழிதுறை யேதில் லாது
கனிவுடன் வளர்க்க நின்றுக் கலையெலா மொருங்கு ணர்ந்து
நனிவருஞ் சகல வித்தை நாளடை வில்நன் கோர்ந்து
துனியிளம் பரிதி யென்னச் சுபமுடன் விளங்க லானார் 185

விளங்கிட மணத்தின் காலம் விரைந்திடப் பெரியோர் கூடி
களங்கமில் லோரைப் பார்த்துக் கடிமணஞ் செய்ய வுன்னி
வளக்கனி வடிவு மன்னும் மாபதி வரிசை கொண்டு
துளங்குகும் போத ரப்பேர் சுகிர்தன்சந் ததிப்பின் பெண்கள்

சொல்லிடு மமிர்த வல்லி சுந்திர வல்லி காந்தி
வல்லிநற் கமல வல்லி வயங்கிடுங் காம வல்லி
நல்லின சந்த்ர வல்லி நவிலரு வனச வல்லி
செல்லெழி லசன வல்லி செப்பிடு மெண்மர் தானும் 187

---

* கோத்திரத்துக்குரிய முனிவர்களின் பெயர்கள்.

1. முகுந்தமகாருஷி
2. மங்களமகாருஷி
3. கௌசிகமகருஷி
4. ஹரிகுலமகாருஷி
5. கௌண்டியமகாருஷி
6. தொந்துவமகாருஷி
7. பில்லிவங்காமகருஷி
8. கணத்தவமகாருஷி
9. மாண்டவ்விய மகாருஷி
10. சாண்டியமகாருஷி
11. கௌதமமகாருஷி
12. வாசவ மகாருஷி
13. அநுரூயசோமமகாருஷி
14. சுகமகாருஷி
15. குடிகுல மகாருஷி
16. குந்தலமகாருஷி

பெண்வீட்டுக்கோத்திரம்.

1. நகுலமகாருஷி
2. காளத்திமகாருஷி
3. வீரதார்க்கிர்யமகாருஷி
4. இரோசமகாருஷி
5. அத்திரிமகாருஷி
6. விஸ்வாமித்திரமகாருஷி
7. விற்பனமகாருஷி
8. பரத்துவாசமகாருஷி

ஏகநா யகிபாள் நற்பே ரிசைந்திடு மோக னுங்கி
பாகுரை சுரத வந்தி பங்கஜ வல்லி யென்னும்
ஆருணா குமுத வல்லி யழகிழை பாம வல்லி
சோகுகுறும் பருவ வல்லி சொல்லுமிவ் வெண்மர் தம்மை 188

கான்முளை வகையால் வந்து கதித்தவி ரெட்டு பேர்க்கும்
மேன்முறை வரிசை காட்ட விபுதர்க ளாசி கூற
கோன்முறை வளங்க ளீட்ட கூடின ராப்ப ரிக்க
தென்மலர் மாலை சூட்டிச் செப்புமங் கலங்க ளோட்டி; 189

நீதிசேர் போஜ னுக்கு நிகழ்த்திடுங் கெந்தி வல்லி
பூதிசா தனன்ற னுக்குப் புகழ்ந்திடுங் கனக வல்லி
காதலம் பலவ னுக்குக் கருதுமா ணிக்க வல்லி
யேயதி காந்த னுக்கு மேற்றகற் பகவல் லிப்பேர் 190

சேரதி ருப னுக்குச் சிறப்புறு மேக வல்லி
நாரணி வாம லோச னன்றனக் கினிமை நீட
பேரணி மிருது வல்லி பெருஞ்சய சிம்ம னுக்குத்
தாரணி குணத்தின் மன்னுஞ் சண்பக வல்லி யாளும் 191

பார்புகழ் தாங்கும் ப்ரதா பகரனுக் குகந்த வாறு
தார்புகழ் சௌந்த்ர வல்லி தான்றகு மென்ன வெண்ணி
வார்புகழ் கச்சு நீடு வனிதையர் வரிசை காட்டிப்
பேர்புகழ்க் கும்ப மேந்த பெருங்கடி மணமிங் காற்ற 192

தண்டுழாய் முடியோன் மார்பாள் தந்தவண் கமலத் தார்வாள்
விண்டொழு நாக நாட்டு வேந்துபு லோம சையாள்
பண்டுரை பரமன் வாம பாகமார்ந் தவளே யென்று
கண்டுணர் நட்டுஞ் சிர்ப்ர கஸ்பதி பாரி போலும் 193

மணமகன் றனக்கு கந்த மணமக டன்னைச் சேர்த்து
மணம்பிகல் மாலை சூட்டி வாத்திய வோசை யண்டக்
கணமுக முன்ன வந்தோர் களிமதுக் கடலி லாழ்க
வணவகை பூரி காளம் வழங்கிட வையம் போற்ற 194

கதிர்தருங் கோடி திங்கள் கதித்திடும் வகையால் மௌளி
விதிர்ப்புற கண்வ ழுக்கு வீசுபு மாலை மார்பி

ளிதிப்புற மென்ன மேவ நீண்டவுத் தரியந் தொங்க
மதிப்புறும் பணிக டென்ன மலரடி சிலம்பு மார்ப்ப 195

பண்டுசெய் தவத்தால் வானோர் பரவிட பகரற் கொண்ணுத்
தொண்டுசெய் வோர்கள் சும்மை சூழ்ந்திட சுற்றஞ்சேர்ந்துக்
கண்டுசெய் கரங்க டாவக் கார்தொடு மாட மோங்கி
யுண்டுசெய் துவஜ வோசை யொளித்திட மேக மென்ன 196

வேறு.

உலகுயிர் காக்கு மொப்பிலாப் பரம
னலகிலாக் கருணை யால்மண மாற்றி
யிலகிய முற்புவி யீஸ்வரன் பெற்று
நிலவிய வட்சதை நீடுறத் தாங்கிச் 197

சாதுகா மாட்சித் தன்னருட் பெற்றுச்
சாதுகு லத்தின் தனபால ரென்ன
சாதிக் குரிமைத் தாங்கும் விருது
சாதித் தேகச் சற்குடும் பத்தை 198

தழுவிய நிகரிலாத் தகைபூண் டிருக்க
வழுவிலா வந்நகர் வனப்புறச் செங்கோல்
செழுமிய கீர்த்திக் கிரீடம் வாய்ந்த
மழுவு தகபு வைரகுண் டலத்தான் 199

ஒச்சிடுங் காலை யோர்நா ளுசித
காச்சனை புரியாக் கதித்திடு மரியின்
மச்சணி யாசனம் வந்தமர்ந் தேய
மைச்சரை யூகத் தலைவரை மகிழும் 200

பரிவா ரங்களைப் பரிபா லித்தே
சரிவரு நான்கு சாதியா ரழைத்துத்
தெரிவுறச் செய்துதன் சிந்தையிற் பன்னாட்
கருதி யிருந்தக் கவலையை நீக்க 201

தேர்தரு மன்பிற் சிறந்தவ ரோயிவ்
வூர்தனிற் குடிக ளுவந்துசெய் பயிர்க
ளார்பற் றுனிய மாம்பல தேயஞ்
சேர்விப் போர்க்குச் சிறந்த பரிசுடன் 202

பகர்சகத் ரட்சகப் பட்டமுங் கொடுக்க
வகமுடை யேனென வறைந்த மாற்றம்
பகுவாய்ச் சிங்கப் பரிவா ரமெனத்
தகுவோ மென்று தனபாற் றெலுங்கு 203

பில்லி செட்டிப் பிரபல நாஞன்
கெல்லையில் புஜபல ரெழுந்து யாங்கள்
வல்லுற வச்செயல் மகிதலத் திடையே
சொல்லு முன்னர் துகளறச் செய்வோம் 204

என்னலும் வால்வா ளேந்துள மகிழ்ந்து
பண்ணிய தீரப் பதினறு பேரை
மின்னிய ரதின விகசித விடுதியிற்
றுன்னிட வைத்து சூழ்குநர் களிக்கச் 205

அரியா சனத்தே யமர்த்திட் டணிகள்
சரியா யமைத்துச் சாந்துபன் னீர்மணம்
பிரியா மலர்வகை பெட்புறச் சாற்றி
விரியா வடைக்காய் விறலொடு தந்து 206

உள்ளங் களிபெய்ந் துவந்திடு வண்ணங்
கள்ள மின்றிக் கனம்பலப் புரிந்து
விள்ளக் கிளர்ந்த விபலுரை படியே
தெள்ளச் செயுமின் செயுமின் கீர்த்திச் 207

செறிவுறு மென்னச் செப்பிட வரசு
மறிவுறத் தியபடி யனைவரு முவந்து
நெறிபுறுத் திடுசபை நீங்கிப் போந்து
பொறிமரு மார்பன் புகழ்சோ தரியாள் 208

அம்மைகா மாட்சி யாலயம் புக்கிச்
செம்மையர்ச் சனைகள் சிறப்புட னடாத்தி
மும்மைமீச னுலக முதல்வியென் றேத்தி
மெய்ம்மறை *சகத்திர நாயகி ளம்பி 209

அடியோர்க் கிரங்கு மம்மணி யேயிப்
படியான் மன்னன் பகர்தரு வகையெப்

* சகத்திர நாயகங்களை 57-ஆவது பக்கங்காண்க.

படியா கினுமுன் பரிவா னடக்கும்
படியா யருட்கண் பார்த்திடு வென்று 210

எத்தி நிற்க வெம்பிரான் வாமபா
கத்தம ரம்மை கனிந்திடு மன்பாற்
சித்தம கிழ்ந்துச் சித்தி யடைவீ
ரித்தரை யென்னுங் கெழிலவர மருளப் 211

பெற்றவ ரவ்வரப் பெருமிதந் தாங்கி
மற்றுங் குடிகளை வருந்தி யழைத்தாங்
குற்ற வேளாண் குடிசிறப் பேயள
வற்ற வகையா யமைதர வுன்னி 212

சீராற் றியநற் றெண்டிரை கடலுட்
பாராற் றிடுமுயர் பல்லுயிர்நீடக்
காராற் றிடுங்கூர் காரா ளத்திர
ளோராற் றிடுதற் கெழினுட் பார்த்து 213

குறிநிலக் காலக் குறிவினை பகுதி
செறிபல வோர்ந்து சீர்வான் றிறமும்
திறம்வெயிற் காற்றின் றிறனறிந் தேபற்
சிறப்புறு வகைக டெரிந்து சித்திரைத் 214

திங்கண்முற் பக்கஞ் சேர்சனி ஞாயிறு
தங்கு நவமியுஞ் சார்ந்திரட் டித்தப்
பொங்கமர் திதியொழிப் போகவி டுத்து
மங்கல நாளில் மறைநான் கறைந்த 215

இலைநீ ரோரைத் தீயோ ரைப்பல
சிலையோ ரைகழித் திறன்மிகுஞ் சீர்த்தி
நிலவோ ரையில் நிலவிடச் செய்து
தலையோர் பொன்னேர் தழைத்திட பூட்டி 216

தார்விழாக் கொண்ட தகைசால் சோழன்
சீர்விழாக் கொள்ள திருவிழாச் செறிய
பார்விழா மலிகப் பகர்விலாப் பரிவால்
ஏர்விழாப் பூட்டி யிசைத்தன ரலப்படை 217

ஆழிசூ ழுலக வரசர் வாழ்க
வாழிநான் மறையென வழங்கிட வேதிய
ரூழிபெருக வுரைசீர் வழங்க
மேழி பிடித்தூற் றூணி விழைத்து 218

புறத்திரு ளொதுக்கும் புவிப் பருதி
தறையிரு ளொதுக்குந் தகைமீயர் நுகமெனப்
பொறையுடன் கொற்றப் புனித வுரைபோல்
சிறப்புறு நுகத்துச் சீரெரு தமைத்துச் 219

செங்கோல் நடத்துஞ் சீரோர் சிறுகோல்
செங்கரந் தாங்கிச் செம்மை யுழுநர்
பங்கினை யுழுது பண்ணைப் படுத்திக்
தங்குக ரம்பைத் தாக்கித் திருத்தித் 220

தெண்ணீர் பாய்ச்சிச் சேறு செய்துப்
பண்ணைப் பழகப் பரம்படித் தெக்கியக்
கண்ணிட் டிருந்த கன்வட் சதையை
மண்ணினர்க் கீய்ந்து வளமுடன் விளைத்தார் 221

விற்பொலி யரசன் மேன்மை கெழுமிய
பொற்பொலி வன்ன புகழ்மீக் கூறுஞ்
சொற்பொலி வுடைத்துச் சூழ்தர நின்ற
நெற்பொலி வடைந்தன நியதிரா ளம்மா 222

நெல்லொடு பற்பல நிதித்தா னியங்கள்
சொல்லடு மொப்படி சோர்விலா தமைத்துப்
பில்லிவ ளன்முதல் பேசுமூ வெண்மரும்
தல்லிய ருளாற் சாற்றரு விதமாய் 223

சேர்த்துத் தரியைச் சீர்நவ மணிகளால்
கோர்த்துச் சூத்திரக் குறுங்கயிற் றூலே
சீர்த்தகு மாகதச் செம்பா விழைத்துக்
கார்த்தகை ஜனவுப காரி யென்னும் 224

பூண்டுநார் கிழித்து புகடரி யிட்டு
வேண்டு தீபனை வேத்தியங் கொடுத்து

நீண்டணி கோணி நெசித்துப்பை யாக்கி
காண்டகு மணிகளைக் கணித்துவெவ் வேறாய் 225

நிறப்பி முசுக்கை நீடெழுத் தோளும்
உறப்பயி லஸ்வத் தவர்முது கிட்டுஞ்
சிறப்புறப் பற்பலத் தேயம் போக்கி
மறப்பெய் தாது மாறிப்பொன் பெற்று 226

ஏற்றி பரம்பரைக் கிழைந்த விருதாக
னாற்றித் தரும மணியுட னன்பு
சாற்றியே யெங்கணுஞ் சதிரார் சீர்த்தி
போற்றிடச் சகத்தி ரட்சகப் பொலிவு 227

சூழ்தர விருக்குஞ் சூட்சிகா லத்தே
பேழ்தருஞ் சோழப் பிரபல வேந்தன்
காழ்மணி யரண்மனைக் கடுகிப் பலவூர்
கீழ்தருங் கள்வர் கிடுகிடுத் திட்டே 228

வந்துபு குந்து வளப்பலப் பொருள்களு
வந்தெடுத் தோடி வருவதைக் கண்ட
வந்தனைக் காவலர் வாட்கர மேந்திக
வந்திடக் கண்ட மறமார் கள்வர் 229

மலுங்க வோடோடி மனம்பல வுறுப்புங்
குலுங்க நடுக்கங் கொண்டிடப் பயந்து
வெலுங்கருத் தற்று மேன்மை'குலத்துத்
தெலுங்குசெட் டிகள்பாற் சேர்ந்தன ரபயம் 230

தந்திட வேண்டிச் சரண்சர ணென்ற
டைந்திடு வோர்க்கா மஞ்சுதல் தீர்க்கு
முந்துசொன் மறையின் முறைமுறை கொண்டி
ருந்திட வயமு வந்திடச் செய்தார் 231

வேறு

பின்றொடருங் காவலர்கள் பேதமுற நண்ணி
வன்றரும மோர்சிறிதும் வாய்த்தவகை யற்றோய்
மன்றிரட மாடுபொன் மாமலர்க ளேத்தி
நன்றமரு மெங்களறை நன்மனைபு குந்தே 232

நாடுபொரு ளானபல நன்னிதிய நேர்மை
கூடுகள வானவகை கோதுபட வாற்றி
நேடுபொரு ளாடிவரும் நீசர்களை நீவிர்
வீடுபெற வைத்தவகை விருதுபிடித் தீய 233

வேண்டுமென வன்புடன்வ ளாங்கியெதிர் நிற்க
பூண்டவிர தந்தளரப் போகுவகை யில்லா
மாண்டவநற் சாதுகுல வள்ளலர்க ளன்பீ
ரீண்டபய மென்றவர்க ளெக்கமுறு வண்ணம் 234

கைப்பிடிபி டித்துமது காவல்வகை தன்னில்
மெய்ப்புடன்வி டுத்திடுதல் மூசுமழ கல்ல
தப்பில்மநு நீதிவழு வாகுமெனச் சாற்றி
யொப்புட னிருக்குமிட மோடுமினென் றார்கள் 235

சொற்றமொழி கேட்டுமனஞ் சோர்ந்திடுகா வல்லார்
நற்றவர்நீ வித்திறமை நன்றலவு ரைத்தல்
கொற்றவனு ணர்ந்திடவெங் கோதுவரு மென்ன
பிற்றைமொழி யின்றிறைவன் பெட்பமரி டத்தே 236

செப்பிடுமி னென்றமொழி சீர்பெறவு ணர்ந்தா
ரிப்படியி லுங்கள்சிர மேகுமுன மாகத்
தப்பவிடு வீரெனலுந் தாட்டிகர்க ளோய
வப்படிவி டுப்பதிலை யாகுமவர் கட்காய் 237

எங்களினெண் மூவர்சிர மீவதிங்க லாது
உங்களிடந் தஞ்சமென வொண்டினவர் தம்மைத்
தங்கவிடு வோமிலைசொல் சாற்றிடுவீ ரென்ன
வங்ஙனகன் றேயவர்க ளரசுமுனர் சென்று 238

நிகழ்ந்தனவு ரைத்திடலு நீதிமுறை யண்ணா
லிகழ்ந்தனனு விச்சமய மேகியவர் தம்மைச்
சகந்தனின் மடித்தவர்க டந்தலைகள் கொண்டே
யகந்தனைய டக்குவதிங் காண்மையெனச் சாற்றும் 239

கோபமொழி கேட்டவர்கள் கொப்பெனவே நண்ணிச்
சோபமொழி விட்டகுலத் தோர்களிடஞ் சொல்ல

பாபமொழி யும்வகையெம் பால்வருதி யாமால்
யூபவழி யாய்தலைக ளுங்கள்கர மீவோம் 240

வேறு

என்றிரு பத்து நான்கு இயற்குடி யாளர் சொல்லி
மன்றினில் நடித்தோன் நேவி மகிமைகா மாட்சி வாக்கை
யொன்றிய கோவின் முன்ன ருவந்துதங் கடன்மு டித்து
நின்றவ ரேத்தித் தங்கள் நிலையில்வால் நத்தி தன்னைக் 241

கழுத்தினில் மாட்டித் தங்கள் கவின்பெறுஞ் சிரங்கள் கொய்ய
வழுத்திய தருணம் சோழ வறையனு முண்மை கண்டு
வழுத்திய வார்த்தை யாலே மாவுயிர் நீக்க வுண்மை
பழுத்திடு மிவர்போல் யாவர் பாரிலுள் ளார்க ளென்று 242

நல்லுளங் கொள்ள வந்து நாடினா ரெல்லா மிந்த
வல்லுந ராகுஞ் சாது வண்மைசேர் குலத்தார் போல்வா
றில்லையென் றியம்பி நின்றா ரெஞ்சிய கள்ள ரெல்லா
வொல்லெலன வோடி ஓகோ வுத்தமச் செட்டி மார்கள் 243

நன்னிலை தவறீ ரிந்த நாட்டினி லுயர்ந்தீர் நுங்க
ளன்னிய மில்லாச் செய்கை யார்புரிந் திடுவார் நீவிர்
மன்னிய சத்ய வான்கள் மதிமிகும் புண்யவான்கள்
துன்னிய நுங்கள் போன்றார் சொற்பனத் தறிந்தோ மில்லை 244

யாகமேவத் திடும்போ தாங்கு அடுத்தவர் தாங்க ளேத்து
வாகமர்ந் திடும்போ தம்மை வந்துமுன் றோன்றி மிக்க
மேகமாம் மூர்த்தி யோடு விபுதர்கள் சூழ நிற்க
வாகவெண் ணீறுபூண்ட வத்தனுங் கரத்தைப் பற்றி 245

அஞ்சன்மி னபயந் தந்தா மருங்குலப் பெருமை கீர்த்தி
எஞ்சிடா திருக்கு மிந்த விகபரத் திரண்டி னுள்ளு
மிஞ்சிய வாழுந் தந்து மேவினர் கயிலை தன்னில்
குஞ்சர மூர்ந்த வேந்தன் குலவினர் மகிழ்ந்து போனார் 246

# மூன்றாவது அத்தியாயம்

வேறு.

சென்றிடச் சின்னாள் சிலம்பவித் தையில்
வென்றிடும் புயபல வீரனாய் வண்மை
பொன்றிடாப் பல்லவ ராயனென் போனுங்
குன்றினில் பருத்தக் கோதறு தோளான் 247

சீரணி சோழ தேசத் துள்ளே
யார்நிக ரென்றுங் கதாகதஞ் செய்து
வார்நிறை காஞ்சி யிருந்திறு மாந்து
சூர்தரும் கொடுமை சூழ்ச்சி புரிந்திட 248

கண்டணி மகுடக் காந்தி மௌலியிற்
கொண்டிடுஞ் சோழக் குழகன்ற னுங்கு
தெண்டிரட் சேனையில் தேர்ந்தவர் விடுத்தும்
மண்டணி வெற்றி வகையிலா திருக்க 249

வருந்திய மனதால் மந்திரி வகையி
ருந்திடும் பல்லோ ரிசைத்திடக் கூவி
திருந்திய விவனைச் செற்றவர் தமக்குப்
பொருந்திய வென்றன் புகழ்தரும் விருதாம் 250

டங்கா பேரிகை டமரகஞ் சின்ன
மங்கா ராஜ வளர்தரு மேளம்
வெங்கல விழைந்த வில்லுபாங் கிட்டி
கொங்கவிர் கோணக் கொம்புபல் லயமும் 251

பிண்டிவாள் முஷ்டிப் பெருஞ்சயக் கொடியும்
தண்டுவெண் குடைவெண் சாமரம் விசிறி
பண்டுதச் சுருட்டி பகல்தீ வர்த்தி
வண்டணி யால வட்ட முடனே 152

நித்திலச் சிவிகை நேர்படு பொருட்க
ளித்தரை யளிப்ப விலவச மாகப்
புத்தமு தென்னப் புகழ்பெறச் செய்வனின்
பத்துடன் பெரும்பேர் பறையறை வித்தான் 153

அன்னைசொல்லோர்ந்தபோதே யருமகப்பேற்றில்வந்தோர்
மன்னவன்முன்னையோகி மதிதலம் புரப்பாயின்றே
சொன்னவாறவனையாமே துடிக்கினையடக்கிவாகை
நன்னயத்துவஜமேற்றி நலம்பெறவிடையீவாயே. 255

கேட்டலுமுவகைபூத்தகேடில்சீர்ச்சோழன்வில்வான்
நாட்டமூன்றுடையோன்றேவ நாயகியருளைபெற்றோய்
தாட்டிகமாகவந்த தகவிலான்றன்னைக்கொன்
றாட்டவேவேண்டுமோகை யெழுலுடன்செல்வீரென்ன, 256

விடையதுபெற்றேநீங்கி வேகினர்வீரன்முன்னே
கடையனீயேனோவிந்த கர்வமதடைந்தாயாவி
யுடையவேசெய்வேனென்று வொப்பிலாநாகமென்னு
படையனைவிடுக்கவன்னோன் பதைத்துடன் மண்மேற்சாய்ந்தான். 257

பல்லவன்சிகையைப்பற்றி பார்ப்பதிமுன்றில்முன்னே
வல்லவியுபயதாட்கு வருச்சனைசெய்துவாங்கே
கொல்லவேதுணிந்துமிக்க கூருளகட்கத்தாலே
மல்லலந்தினிதோளான்சென்னி யண்ணிடைச்சாய்த்துமீண்டார். 258

ஆண்டகையரசனோக்கி யழைத்திவருச்சிமோர்ந்து
வேண்டியபொருளினோடு விளம்பியபிருதுமீந்து
யீண்டிவர்துய்மைக்கீடு யியம்பிடவெனாலுமோ
வேண்டினனனிவர்குலத்து வேந்திழைமணத்திற்கென்றே. 259

என்றிவையமச்சரோடு யியம்பிடவினையமோர்ந்து
நன்றுநன்றீதுரைக் கிபாயமோவெனவுரைந்து
துன்றியவாகையாளன் சுரேந்திரமுன்னர்சொல்வான்
மன்றலங்குழாலாள் கச்சிமாதருள்பெற்றமேலோய் 260

உங்குலந்தன்னிற்றோன்று மொப்பிலாக்கற்புனீடும்
நங்கையாளெமக்குயீந்து நவில்மணப்பேற்றையாற்றி
தங்குமின்னகரினுள்ளே தகவிலாதிருந்துவாழ
சங்கையொன்றில்லாதிங்கே சாற்றுவீரென்னவாங்கே 261

சமயமதறிந்துவாங்கே சாதுமாகுலத்துவந்தோன்
குமரியொன்றுமக்குயீவேன் கோதில்சீர்வேந்தேயென்று
தமரிதையறியவேண்டி தாழ்விலாநடையினோடு
இமமலையனையதோளா னெடுத்திவைகூறலுற்றான் 262

குடிதனிலுடுத்தகோதைக் கொடுமெனுமாற்றந்தானு
மிடிதனை இடித்தாற்போல யிளயவர்செயிலேற
துடிதுடித்தார்த்தெழுந்து துற்குணசோழபாவி
மடியவேசெய்வனென்றே மட்டிலாச்செற்றமோடு 263

கண்ணிற்றீசிதறநோக்கி காளையர்களைத்தெழித்து
பெண்ணிவண்நம்பாற்கேழ்க்கப்பிடுடையானேயென்று
திண்ணபாயவனதாவி தென்னுலகடையச்செய்
தண்ணலேவருவோமென் றனைவருமார்த்துநின்றார் 364

தன்மொழிபிறழாத்தூய தனயவரனைவருக்கும்
நன்மொழியாசிகூறி நயமுளமைந்தாநீவிர்
என்மொழிதவாதுவாய்மை யெழிற்பெறவேண்டுமாறு
உன்னியேநடத்தல்வேண்டு முவப்புடன்பூகிப்பீரே 265

செற்றமதடைந்தமாற்றந் தெளிவுறவோதவெண்ணி
யொற்றர்கள்விரைவினோடு வொலிமிகுசதங்கையார்த்த
கொற்றவன்முன்னர்த்தாழ்ந்து கூறுவாரிவர்தஞ்சேதி
முற்றுதஞ்செவியிலோர்ந்தே முதிர்தனன்முடியாக்கோபம் 266

அளவிலாக்கோபமுள வண்டமுமிளக்கவார்த்
துளமிகவொதிப்புவேறி வொளியரியனையிழிந்து
விளம்பியவாறுநீங்கி வெறுத்துரைகொள்ளற்பாற்றே
களமதையடையவின்னே கழறுவீரமைச்சரேறே 267

இம்மொழியோர்ந்துநீதி யியம்புவோன்சொல்வானைய
செம்மைகொள்மகத்துதித்த தீரரைசெயிக்கலாகா
நம்மையாளமலநாத னுயகன்பாகமார்ந்த
வம்மையினருளைப்பெற்றவ வர்க்கினைபூவிலுண்டோ 268

ஐயனேநமதுமன் றிலன்புடனிலங்குகின்ற
துய்யமாதேவிபூஜை சுத்தமாய்நடத்திப்பின்னர்
செய்யமாசிறப்புவாற்ற திகழிருபத்துநால்வர்
வையகம்புகழுநம்மை வணங்கியேநிற்பர்மன்னா 269

சாதியிற்சிறந்தமேலாஞ் சற்சனிருபான்நால்வர்
பாதிமாமதியணிந்த பரமன்றன்பாகமார்ந்த
ஆதிநாயகியாள்பாத மண்மையிலிறஞ்சியேத்தி
காதியான்கொண்டவெண்ணங் கழறுவார்கசிந்துநின்றே 270

மங்களமாதேயெங்கள் மாகாமகவரசகோத்திரம்
பங்கமதடையாதென்றும் பாதுகாத்தளித்துப்பின்னு
மெங்களின்வாக்குதப்பா திருத்திடவேண்டிநாளும்
துங்கநற்பாதப்போதை தொழுதுடன்வேண்டிநின்றார் 271

பலபலவாகப்பாடி பண்பினாலிறைஞ்சியேத்தி
யலகுதன்கழுத்திருத்தி யாவியைநீக்கும்போது
விலகியேசுரிகைதன்னை விளம்புவாவீதுகேழ்க்க
யுலகியற்படிநடத்தும் மொப்பிலாயுமைபாட்த்தோன்றி 272

நற்குலந்தன்னில்வந்த நயமுளமைந்தர்நீவிர்
சிற்பியையழைத்துவின்றே செம்பொனாற்பதுமைவார்க்க
கற்புறும்மங்கைபோலே காணுவாள்யெம்மாற்பாவை
யற்புறுஞ்சோழற்கீய்ந் தவன்றிறமறியாநிற்பீர் 273

அஞ்சனவேற்கணம்மை யஞ்சலேவேண்டாமென்று
செஞ்சரணிரண்டுஞ்சேர்க்க சிறப்புருஞ்செட்டிமார்கள்
நெஞ்சினிலுவகைபூக்க நேயமாயாடிப்பாடி
மஞ்சுலாஞ்சிகரமேயும் மகிலமடைந்துயிப்பால் 274

சிற்பியையழைத்துநல்ல சொம்போனாற்பதுமைவார்த்து
பொற்புறபணிதிவேய்ந்து பொலிவுறுதிருவீதென்ன
நற்குணதெனுக்குசெட்டி நாயகாரசர்பாலே
துற்பணமியற்றவெண்ணி தூதரையேவினாரால் 275

தூதுவனடியிற்றாழ்ந்து சொல்லுவானையறம்பால்
தீதுவொன்றில்லாமிக்க தூயமாஞானமுற்ற
சாதுவாங்குலத்துதித்த சற்சனசெட்டிமாரின்
மாதினைமணக்கவேண்டி மணவரையிடவரைந்தார் 276

என்றனுமோகைவெள்ள மிருங்கடற்றன்னில்மூழ்கி
துன்றியதினிதோள்மன்னன் செயபொனாற்பந்தரேய்ந்
தொன்றியவிருப்பினோடு யுலகெலாந்தெரியச்செய்தே
குன்றவர்கொடியைவேட்ட கொள்கைபோல்வதுவையார்த்தான் 277

நற்சுபமுகூர்த்தமென்று நலமிகுமுதியோர்கூற
பொற்புறுபதுமையென்று புந்தியிலறியநல்ல
விற்பனமில்லாவேந்தன் விரைவினிலறையிற்சென்றே
கற்பனைகடந்தமஞ்சச் சலவியைவிளைக்கநேர்ந்தான் 278

சங்கையொன்றில்லாதெந்தன் சரசியேவாருமென்ன
அங்கஜன்கணையின்கோர மடக்கவுமாகாதென்று
பொங்கமாய்மேல்விழுந்து பொற்புறவணைக்குபோது
தங்கமென்றுணர்ந்துவாங்கே தாழ்விலாசெற்றங்கொண்டான். 279

சோழனுமிகவேவெட்கி சொல்லொணாமானத்தாலே
தாழவேசெய்தநுங்கள் தகவிலாக்கோத்திரத்தி
லேழ்மையாகருபமிலாத பெண்மகவைப்பெற்று
யீழ்நாடடைந்து நீவிரிசைகெடநிற்பீரென்றான் 280

அம்மொழிசெவியிலோர்ந்தே வயன்மகப்பேற்றில்வந்தோ
ரெம்மைநீமதியாதிந்தவிரும் பெருஞ்சாபமீந்தாய்
நம்மைகொள்ளுங்கள்வம்சம் நாசமாய்ப்போகவேண்டி
இம்மெனப்பிரதிசாபமிட்ட வராங்கண்மீண்டார் 281

வெவ்வியவிடப்போற்றி வேந்தனின்மனையிழிந்தே
செவ்விபாந்திருக்காமாக்ஷி தேவியின்பாதப்போதும்
நவ்வியங்கரத்திலேந்தும் நாயகன்பாதம்போற்றி
தெவ்வானுஞ்சோழநாட்டை துறக்கவேயருள்செய்யென்றே 282

பாதபங்கயங்கள்போற்றி பண்பினாற்தோத்தரித்து
வேதனைநீக்குமெங்கள் விமலநாயகியேயென்று
யேதமறக ற்றிமண்மே லெழிலுறும்வாழ்வையீந்து
சீதளக்கடைக்கண்பார்வை செல்வியைநேர்ந்துவன்றே 283

வாணிபத்தொடத்திமிக்க வழுவிலாக்கும்பின்சத்யம்
நாணிடவகைகள்செய்தே நாட்சிலசென்றபின்னர்
காணிபொன்பிறவுங்கொண்டு களிப்படன்மிகவேவோங்கி
ஆணியொன்றில்லாராங்கே யமர்த்தினிதுடனேவாழ்ந்தார் 284

செப்பருஞ்சீர்த்தியுற்ற சேயவரிருபான்நால்வர்
யொப்பபருட்புகழைச்சாற்ற வேலுமோயுலகோரீதிற்
தப்பிதமுளதென்றாலுந் தனையவர்குற்றங்காட்டார்
செப்பமதிதேவென்று தெளிவுளோர்கூர்வர்மாதோ. 285

சுபம்! சுபம்!! சுபம்!!!

வாழிவிருத்தம்,

வாழ்கமாமாதுயுமையாட்பாதவாஞ்சையுள்ளோர்
வாழ்கமாமகக்ஷத்திர்யகுலம் மன்னிவாழ்வென்றும்
வாழ்கமா மன்னவர்தங் கீர்த்திநிலைவசிக்கப்பெற்று
வாழ்கமாவின்நூற்க்கு வாசிரியன்வாழ்கவாழ்க.

உ

# விளம்பரம்

(—)

இதனால் இருபத்துநான்குமனையார்களாகிய சாதுகுல தென் தெலுங்குசெட்டிமார்களுக்கு தெரிவிப்பது யாதெனில், ஷை யார் குலத்தின் சிலாஸாஸனமானது திரு காஞ்சிமாநகரம் ஸ்ரீ காமாட்சியம்மன் ஸந்நிதானத்தில் காமகோட்டி பீடத்தி லிருப்பதை சுமார்45-வருஷங்களுக்குமுன்சென்னைஇடைப்பாளையத்திலிருக்கும் தென் தெலுங்கு செட்டிமார்களுக்கும், சில அன்னியர்களுக்கும் நேர்ந்த ஏர்வாய்மொழிதர்க்கத்தால் கனம் எல்லிஸ்ட்டு துரையவர்கள் இவாள் வாக்குமூலத்தைக் கொண்டு நான்கு வருணத்தோர் சிலாசாஸனத்தை தாம் பார்க்க வேண்டுமென்று அபிப்பிராயங் கொண்டதால் மேற்படி செட்டிமார்கள் சிலபொருள்களைச் செலவிட்டு, மேற்படி பீடத்தி லிருப்பதை யெடுத்து சாட்சி காட்ட துரையவர்கள் பார்வையிட்டு திருப்தியடைந்தவுடன் ஜகத்குரு சங்கராசாரியரவர்களால் ஏற்படுத்திய தாம்பர ஸாஸனத்தைப் பார்த்து சென்னை வண்ணாரப்பேட்டைக்கடுத்த குசப்பேட்டை செல்வவிநாயகர் கோவில் வீதி (   ) நெ. ம-ா-ா-ஸ்ரீ. மக்கடி பெத்தஞ்செட்டியார் கையேடாக எழுதியதை ஷை யார் கனிஷ்டகுமாரர் ம-ா-ா-ஸ்ரீ.ம. பெ. இராகவசெட்டியா ரவர்கள் முதன்மையாயிருந்து ஷை குலத்தார் யாவர்களும் இப்புத்தகத்தி லிருப்பதை தெளிவாய்க் காண்பதற்காக ஷை யூர் கல்மண்டபம் ம-ா-ா-ஸ்ரீ பலவிதுல-லிங்கஞ்செட்டியார் ஜேஸ்டகுமாரன் ம-ா-ா-ஸ்ரீ. இராமசாமி செட்டியாரவர்களால் அச்சிடப்பட்டது. இதனுள் சிலவிவரங்களை யினி அச்சிடும் ஸாதுகுல ஜாதிஸங்கிரஹ புத்தகத்தில் காணலாம்.



மகாமகோபாத்யாய, டாக்டர்

உ

சிவமயம்.

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை.



சாதுகுல தென்தெலுங்கு செட்டிமார்கள்

தாம்பரஸாஸன

# வசனகாவியம்.

---

## வெண்பா.

நாலு யுகமுடிவில் நல்லாலிற் பள்ளிகொளும்
நீலமே கன்பதத்தை நிச்சயமாய்—ஞாலமிசை
நம்பும் அடியவர்க்கெந் நாளுந் துயரறவே
தும்பிக்கை யானே துணை.

நிகழும் கலியுகாதி சென்ற ஐஉாஙஙூஙங்களுக்கு முன் ஆனந்தஙூ ஸ்ராவண சவ்மீயவாஸர நக்ஷத்திர சோபன நாமயோக பத்திரவாகரணம் சுபநக்ஷத்திரமெனும். தினத்தில் சகலபுவனங் களுக்கும் அதிகார கர்த்தராகிய, ஸ்ரீமந்நாராயணமூர்த்தியானவர், வைகுண்டத்தின் கண் லக்ஷ்மீசமேதராய், பாவங்களைசங்கரிக்கும் சுதர்ஸனத்தையும், புண்ணியங்களை யனுசரிக்கும் பாஞ்சஜன்யத்தையும், தமதுகரங்களிற்றாங்கி மெய்யினில்வாடாதமாலை

யைப்பூண்டு உரகசயனத்தின்மீதமர்ந்து, தனது உந்திக்கமலத்
திலெழுந்தருளிய சதுர்முகனும் நாட, வண்டுகள்பாட, பெண்டுக
ளாட, ஆழ்வாராதிகள் புடை சூழ்ந்திருக்குங்கால், அங்கு இந்தி
ரன், எமன், அக்கினி, நைருதி, வருணன், வாயு, குபேரன், ஈசா
ன்யன், திக்குப் பாலகர்கள், சட்ருதுக்கள், ஏகாதசிருத்ராள்,
துவாதசாதித்தாள், விஸ்வதேவர், அஸ்வனிதேவதைகள், நார
தர்முதலான சப்தருஷிகள், சுக்ராச்சாரியர், பிரகஸ்பதி, கெருட
காந்தர்வர், சித்தசாத்தியர், கின்னரர், கிம்புருடர், விச்சியாதரர்
பராசர், பருவதர், சார்வாணிகாலவர், சங்கர், விகிதர், கௌரமு
கர், துர்வாசர், தீர்கதமர், யாக்ஞீயவர்க்கியர், உத்தாரகர், சுவே
தகேது, தாண்டியர், பாண்டாயணி, அவிஷ்மான், கவிஷ்டன்,
சாண்டலீயர், கக்ஷிவான், கௌதமர், வைசுவானவர், சம்வர்த்
தர், தேவேந்திரர், வால்மீகர் இன்னும் அனந்த தேவர்களும்
புடைசூழ்ந்து பூலோகத்தில் அந்தகா சூரனெனும் ராக்ஷதனால்
படும் ஹிம்சையை ஒவ்வொருவரும் முறையிட, சதுர்முகப்ரம்ம
தேவரானவர்தேவர்களைநோக்கி அந்தகாசூரனெனும் ராக்ஷதனை
வதைக்க ஓர் உபாயஞ் சொல்லத் தொடங்கினார்.

ஓ! தேவர்களே, முனிவர்களே, சித்தர்களே, நாம் எல்லவ
ரும்கங்காநதிக்கரைக்குச்சென்று சதாசிவத்தைக்கோரியாகம்செ
ய்வோமாகில் அந்தயாகத்தில் புலியீஸ்வரனென ஓர் சுத்தவீரன்
பிறப்பான். உடனே அந்தகாசூரனால் நமக்குநேரிடும் துன்பங்கள்
யாவும்நீங்கி சுகித்திருப்போமென, அவ்வாறே தேவர்கள் யாவ
ரும் கங்காநதிக்கரையடைந்து, ஆகவேண்டியஎக்கியஹோமாதி
காரியங்களைமுடித்துயாகம்வளர்க்க. அக்குண்டலத்தில் அதிசுத்த
வீரயராக்கிரமசாலியாயும், அகண்டபரிபூரண சச்சிதானந்தஸ்வ
ரூபனாயும், ஓர் உத்தமசுந்திரபுருட னுதித்தான். அதைக் கண்ட
ப்ரம்மதேவரெழுந்து அவ்வுத்தமனை ஆலிங்கனஞ்செய்து சோடச
உபசாரங்களைபுரிந்து அவனைஆதரிக்க, அந்த சுந்தரபுருடனானவன்
பிரமனைநோக்கி நமஸ்காரஞ்செய்து, ஐயாசத்தியலோகதயாபரா,
கமலாசனத்து மீதமரும் கருணாகரா, கலைமகளென்னும் வாணி
யின் சமேதரா! எம்மை உற்பவித்தகாரணம் யாது? அதைத்தெ
ரியப்படச் சொல்லவேண்டுமெனக் கேட்க, சதுர்முகன் சொல்லு
கின்றான்.

அப்பா! அதிவீரபராக்கிரமா, ஒருவார்த்தை சொல்லுகின்றேன் கேளும் அம்மெத்தனவெனில் ஓ! அந்தகாசூரனென்றொருவன் விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் தனக்கு நிகரில்லையென கர்வித்து சகலதேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் யாவரையும் பலவிதமான ஹிம்சைப்படுத்திவருகின்றமையால், அவனை வதைக்க உன்னைக் கோரினேனென்ன, அதுகேட்டு உத்தமகுணம் வாய்ந்த பராக்கிரமசாலியானவன் மனமகிழ்ந்திருக்குங்கால், அந்தகாசூரனெனும் ராக்ஷதன் தானடைந்திருக்கும் இமயகிரி பர்வதத்தைக் கடந்து இன்றையதினம் நாம் சகலதையும் பக்ஷிப்போமென ப்ரளயகால ருத்திரனைப்போல் ஆவேசங்கொண்டு வரும் ராக்ஷதனைக்கண்ட இந்த மஹானுபாவனாகிய யாகத்திலுதித்த சுந்தரப்புருடனெழுந்து இறுமார்ந்து, கண்கள் சிவந்து, பற்களை நறநறவென்றுகடித்து, மீசைபடபடவென்றுதுடித்து திசையெங்கும் கிடுகிடென குதித்து, தேவர்கள் யாவரையு மதித்து, தனக்குரிய வில்-வேலாயுதம்-சூலம்-பிண்டி - பாங்கு - வாளாயுதமான அனந்தவிருதுகளுடன் வீரசிங்கத்தைப்போல் கர்ச்சித்து, அந்தகாசூரனெனும் ராக்ஷதன் மார்பில் பாய்ந்து, அவனுயிரை எமபுறம்சேர்க்க, அவன் பர்வதம்போல் கீழேவிழ, வீழ்ந்து கிடக்கும் ராக்ஷசனைக்கண்ட சகலதேவர்களு மனமகிழ்ந்து, இனிநம திடுக்கந் தீர்ந்ததென, யாகத்திலுதித்த சுந்தரப்புருடனை பலபல விதங்களாய்ப் புகழ்ந்துக் கொண்டாடினார்கள்.

அப்போது பராக்கிரமசாலியான யாகத்திலுதித்த இந்த மஹானுபாவன் வீழ்ந்து கிடக்கும் அந்தகாசூரனது கோரரூபத்தைப்பார்த்துநேத்திரானந்தமடைந்து, இவனுக்குநிகரற்றவர்கள் யாவருங் கிடையார்களென சற்றுநேரம்யோசித்து, ராக்ஷதனது தேகத்தைச்சக்கைச்சக்கையாய்ப்பிளந்து, அவனது ஹஸ்திகளில் சிலதை ஆயுதங்களாகவும், மேல் தோல் கம்பளியாகவும், சிசனத்தை கிராசகோலாகவும், சிலநரம்புகளைச் சூத்திரக்கயிறுகவும், சிரசிலிருக்கும் கபாலத்தை தட்டாகவும் கோர்த்து. மற்றமாமிசங்கள் யாவும் பொடியாகக்கொத்திக் குப்பல்குப்பலாகக்குவித்து பங்கிட்டுத்தேவர்களுக்கு அதை ஒப்பிட்டு அம்மாமிசங்களை தராசில்சமமாகவைத்துநிறுக்க, அந்நிறையில்காமதேனுகற்பகத்துக்கு ½-பலமும், சந்திரனுக்கு ¼-பலமும், சுக்கிரனுக்கு 2-பலமும்,

விநாயகருக்கு 3-பலமும், அக்கினிதேவருக்கு 4-பலமும், பிரகஸ்பதிக்கு 5-பலமும், சண்முகப்பெருமானுக்கு 6-பலமும், வீரபத்திரனுக்கு 7 - பலமும், சப்தரிஷிகளுக்கு 8-பலமும், பிரமாதிகளுக்கு 9 பலமும், ஏகாதசிருத்திரருக்கு 11-பலமும், துவாதசாதித்தாளுக்கு 12-பலமும், விஸ்வதேவருக்கு 13-பலமும், பிதிர்தேவதைகளுக்கு 14 - பலமும், லக்ஷுமிக்கு 15 - பலமும் சரஸ்வதிக்கு 16-பலமும், தேவேந்திரனுக்கு 17-பலமும், ஸ்ரீமந்நாராயணனுக்கு 18-பலமும், பார்வதிக்கு 19-பலமும், பரமேஸ்பரனைமாத்திரம்நிறைகாணுமல்இருந்தபுத்திரன்முகம்வாடி மனதயர்ந்துகடவுளை தோத்திரஞ்செய்ய அந்தருணத்தில்சர்வலோகதயாபரனுகியபசுபதியானவன் அரவாபரணங்களை அணிந்துதனது சடையில்திங்களையுங்கங்கையுந்தரித்துகரத்தினில்மான்மழுவேந்திபர்வதராஜபுத்திரியைவாமபாகத்திற்கொண்டுமார்க்கண்டேயர் குண்டோதரன் அனந்தசிவகணங்களும் புடைசூழ ரிஷபவாகனமேறி நிறைகாணுமல் முகம்வாடியிருக்கும் சுந்தரப்புருடனெதிரில் தோன்றி ஏ பாலகா! நீ யாதொன்றுக்கும்அஞ்சவேண்டாம் நீயே யென்பக்தன். நீயே யென்முத்தன். இந்ததேவர்களுக்கும், முனிவர்களுக்கும், சித்தர்களுக்கும் வந்த இடரைப்போக்கி உன்ஞல் பூமிபாரம் நீங்கினதால் உனக்கு புவிஈஸ்வரனெனப் பெயர் வகித்ததுமன்றி நீ தராசுநிறையில் ஒவ்வொருவரின் நிறையைக் கண்டு களித்தமையால் இந்த பூமண்டலத்தில் உனக்கிணையாவருங்கிடையார். நீ குபேரனுக்கு சமமாக இந்தயாகத்திலிருக்கும் அக்ஷதையான நவரத்தினங்களைக்கைப்பற்றி தனபாலசெட்டியெனப் பேர்வகித்து அஷ்டைஸ்வரியமும் தனகனகசம்பத்தும் உனக்கு உண்டாவதுமன்றி நீஇனி ஸ்ரீகௌரியெனும் சாதுகாயாக்ஷியைச் சுதா பூஜித்துவருவாயாகில, அவளருளால் இன்னமும்வேண்டியதைப்பெற்று வாழ்வாயென ஆசீர்வதிக்க, சர்வலோகதயாபரனது வாமபாகத்திலெழுந்தருளியிராநின்ற உமையவள் தமக்கெதிரில் அடிபணிந்து நிற்கும் புவியீஸ்வரனெனப் பேர்வகித்த சுந்தரனைப் பார்த்து மனமகிழ்ந்து பரமசிவத்தை நோக்கி சொல்லுகின்றாள்.

ஏ! தேவா, அவன் விண்ணுலகோர்க்கும் மண்ணுலகோர்க்கும்வந்த இடரையும், பூமிபாரத்தையும்நீக்கிய புவியீஸ்வரன்சரியை-கிரியை - யோகஞானமுள்ளவன், அஷ்டஐஸ்வரியமும் தம்

மால்வரம்பெற்றவன். அவனநுகோத்திரம் பூலோகத்தில் மேன்மை
றக் கீர்த்தி பெறவேண்டு மாதலால் அவனுக்கு விவாகஞ் செய்ய
வேண்டுமென தயாநிதியாகிய உமையவளுரைக்க, பிஞ்ஞகன் சந்
தோஷமடைந்துஉமையவள்வார்த்தைக்கிணங்கி, தேவர்கள்யாவ
ரும் மாறுருவங்கொண்டு விசாலாவதிபட்டண மடைந்து அங்கக
ரைப் பரிபாலிக்கும் கும்போதர மஹாராஜனாவன் அருந்தவப்புத
ல்வியாகிய பத்மினி லக்ஷணம் பொருந்திய சுப்ரதீபமெனுங் கன்
னிகையை தீர்மானித்து நல்ல சுபமுகூர்த்தங்கொண்டு அப்பட்ட
ணமெங்குந் தெங்கு-கமுகு-வாழை - கற்பகம்-பேரிச்சன்-பலவித
புட்பங்களாலலங்கரித்துமாவிலைதோரணங்கள்கும்பகலசங்கள்எங்
கெங்குந்நிறுத்தி, பதினெட்டுவகை மேளவாத்தியங்கள் தாம்தா
மெனமுழங்க சகலதேவர்களும் ஆசீர்வதிக்க, விவாகமஹோற்ச
வத்தை நிறைவேற்றியபின்னர், விசாலாவதி பட்டணத்தை புலி
யீஸ்வரனுக்கு பட்டந்தரித்து, விண்ணுலகோர்யாவரும் அவரவ
ர்கள்பதிக்குச் சென்றார். புலியீஸ்வரனானவன் தன்மனைவியோட
டார்ந்த சுற்றத்தாரோடு அந்தப்பட்டணத்தை நீதிவழுவாமல் பரி
பாலித்து வருங்கால், அவ்வூரானது செழிப்புற்றோங்கிய செம்
பொன்னினா லிழைத்த மாடமாளிகை சூழ்ந்த நவரத்தினங்களா
லிழைத்த கோபுரந் திருவாயல்களும் ஆங்காங்கு நிறைந்த தாம
ரைத்தடாகங்களும் அடர்ந்த பூங்காவனங்களும் நிறைந்தோங்கி
எங்கும் மாதமும்மாரிபெய்து ஏர்குடிகள்தழைத்து அகண்டஐஸ்
வரியத்துடன் வாழ்ந்திருக்க சிலநாள்தரித்து கௌரீஸ்வரியென்
னும் காமாக்ஷியம்மன் அநுக்கிரகத்தால் சுப்ரதீபமென்னும்
கன்னிகையின் கெர்ப்பத்தில் பூரணச்சந்திர தேஜோமயமான
அழகுடைய - சுகேந்திரன்-சுதரிசனன் - சுபாவு - மணிமேகன் -
விடங்கன்-சுநாகதன்பலியன்னென்னும் ஏழுகுமாரர்கள்பிறந்தார்.
அவர்கள் அஷ்ட ஐஸ்வரியமுடையவர்களாதலால் அதிசீக்கிரத்
தில்சகலகலையும் யானையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தைமுத
லானதுங் கற்றுணர்ந்து எவ்வளவுநிலைமை யடைந்தபின் கும்போத
ரன் வம்சபரம்பரையில் ஏழுகுமாரருக்கும் நல்ல உத்தம ஸ்ரீக
ரான பத்மினிலக்ஷணம்பொருந்திய ஏழுகன்னிகைகளை நல்லசுப
முகூர்த்தங்கொண்டு விவாகஞ்செய்து சகலசம்பத்துடன் வாழ்ந்
திருக்குங்கால், சிலநாள்தரித்து சுநேத்திரன்மனைவிகெர்ப்பத்தில்
எட்டு குமாரர்களாகிய பில்விலங்கரன் - கந்திலங்கரன்-மாரெட்ட

வன்-க்யர்வன்-மக்கடவன்-பிரமக்கடவன் - நவவிநூலவன் - வாஜ் வன்-ரெட்டவன்-தொல்லுவன் - கவிலவன் - பிபிகவன்-கவலவன்-மும்முடிவன்-சோலவன்-குதுருபல்லவன்-சம்பிவன்-கணிதவன் - பச்சவன்-கோட்டவன்-மக்னவன்-லக்கவன்-பலவிதுவன்-ராயுல வன்னன ஆக இருபத்திநான்கு புத்திரர்கள்பிறந்து அவர்கள் எவ் வன் திசையடைந்த உடன் இவர்கள் பெரியதந்தை சிறியதந்தை யாகிய சுதெரிசனன்-ஸுபாகு-மணிமேகன்-விடங்கன்-பலியன் - இவர்கள் மனைவிமார்கள் வர்க்கங்களில் ஒவ்வொருவர்களும் நல்ல எவ்வன உத்தமபத்மினி ஸ்ரீகளைமணந்து ஏகருடும்பிகளாயிருக்க சிலநாள்தரித்து யாகத்திலுதித்த தங்கள்முதாதையாகிய புவீஸ் வரன் பரமசிவனருளால் கைபற்றிய அக்ஷதையான நவரத்தினங் களையும் தாங்களெடுத்துக்கொண்டு விசாலாவதிபட்டணத்தைவி ட்டு சோழநாட்டாளுகைக்குட்பட்ட திருகாஞ்சிபுரமென்னும்சிற ப்புற்றோங்கிய கனககோபுரமும் மாடமாளிகை சூழ்ந்த திவ்விய புண்ணிய தாமரைதடாகங்கள் நிறைந்த ஹரி அரப் பரப்பிரம்ம சேவைபொருந்திய திவ்வியக்ஷேத்திரம் இந்த இருபத்துநான்கு பேரும் அடைந்து அந்நகரில் குடிகொண்டு அதிபராக்கிரம சாலியாயும் அதி உத்தமகுணம் வாய்ந்த வீரசைவராயும் அஷ்ட ஐஸ்வரியமும்பெற்ற சிறுத்தொண்டராயும் ஸ்ரீசாதுகாமாக்ஷிவரப் ப்பிரசாதிகளாயும் நவரத்தின வியாபாரிகளான சாதுகுல தன பாலசெட்டியென பேர்வகித்து தமது ஜாதிக்குறிய விருதுக்கொ டியேத்தி ஒருவரும் தமக்குநிகரிலா ஏகருடும்பிகளாயிருக்குங்கா லத்தில் அந்நகருக்கிறைவனாகிய சோழமகாராஜன் ஒருநாள் முத் துக்கிரீடமும் வச்சிரபதக்கமும் வைரகுண்டலமும் புயகீர்த்தியும் அணிந்து நவரத்தின கசித சிம்மாசனத்தின்மீ தமர்ந்து தனக்கு ரியகரிபரிதேர் காராளர்கள் படைத்தலைவர் யூகத்தலைவர்சேனாதி பதிகள் தனது மந்திரி பரிவாரங்களுடன் அஞ்சலென் றோரை யாதரித்து அந்நகரைநீதிவழுவாமல் பரிபாலித்துவருங்கால் ஒரு நாள் தமது கொலுவில் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென் னும் நான்குவருணத்தோரையு மழைத்து அச்சபையை நோக்கி தன்மனதில் நெடுநாளாய்கொண்டிருந்தகவலையை சொல்லத்தொ டங்கினான்.

அதென்னவெனில் நமது தேசத்தில் குடிகளிடும் பயிர்க ளான பலதான்யங்களும் ஆங்காங்குதேசங்களுக்கு ஒப்படி செய்

யும்மார்க்கம் எவ்விதமோ அம்மார்க்கஞ் செய்பவர்களுக்குத் தக்கபடி வெகுமதியும் ஜெகத்ரக்ஷகனென் பட்டமுங் கொடுப்பேனென்றுரைக்க, அதைக்கேட்டிருந்தமற்றவர்களுந் திகைக்க, தனபாலசெனுங்கு பில்லிசெட்டி முதல் பதினறுபேருமெழுந்து அரசனைநோக்கி யாங்களே அத்திறமையை முடிப்போமென திரமாயுரைக்க, அதுகண்டு சோழமகாராஜன் சந்தோஷமடைந்து இந்தபில்லிசெட்டிமுதல் பதினறுபேரையுமழைத்து நவரத்தினகசிதவிடுதி சிம்மாசனத்தின்மீ தமர்த்தி கந்தகளப கஸ்தூரி புட்பதாம்பூலமுங் கொடுத்து சோடசஉபசாரணையான தக்கமரியாதைசெய்து அரசனவன் ஒருவார்த்தைசொல்லுகின்றான். ஐயா, தனபாலசெட்டிமார்களே தயாபரர்களே எங்கும்புகழோங்கிய கண்ணியர்களே. தாங்கள் தயைகூர்ந்து உரைத்தவாறே, செய்வீர்களாகில் தமது கீர்த்திப்பிரதாபம் எங்கும் நிறைந்தோங்குமென அரசனுரைக்க பில்லிசெட்டியோ டனைவரும் அப்படியே செய்விக்கின்றோமென்றரசரிடம் விடைபெற்று ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகியும் காமகோட்டிபீட கமலாசனத்தி லெழுந்தருளிய ஸ்ரீ சாது காமாக்ஷியம்மன் ஆலயத்திற்குச்சென்று நல்லபரிமளகந்தபுட்பங் கொண்டம்மனுக்கர்ஜித்து, கர்பூர தூபதீப நைவேத்தியங் கொடுத்து சகலரும்சிரமேற் கரங்குவித்து அம்மனைநோக்கி பலவாறாய் துதித்து கவுரி-மாதங்கி-கமலாஸனத்தி-சாது காமாக்ஷி யாங்கள் கொண்டகருத்தை நிறைவேற்றி எங்களையாதரிப்பது உனதுகடனெனத்துதிக்க, அம்மன்மனமகிழ்ந்து அசரீரியாய்வபக்தர்காள் நீங்கள்கொண்டகருத்தாவது முப்போகமும் பூர்த்தியாய் நீங்கள் எங்கும் ப்ரசித்தமடைந்திருப்பீர்களென வரங்கொடுக்க செட்டிமார்கள் அவ்வார்த்தையைசிரமேற்றாங்கி அவ்வூரிலிருக்கும் குடிகளையழைத்து அவர்களால்தமக்குதோன்றின பலநிலங்களைஉழச்செய்து பிர்ம்மதேவன் எக்கியத்தில் இட்டிருந்த அக்ஷதையை அக்குடிகளால் எங்கும் விரைக்கச்செய்வித்து அதில்விளைந்த பல தான்யங்களை ஒப்படிசெய்ய இந்தசெட்டிமார்கள் ஸ்ரீசாதுகாமாக்ஷியருள் பெற்றவர்களாதலால் நவரத்தினங்களினுல் தரியானது சேர்த்து சூத்திர்க்கயிறு கோர்த்து மரகதத்தினுல் பாவிழைத்து ஜனவுபகாரிஎனும் பூண்டைப்பிடிங்கிவந்து நார்கிழித்துபில்லிசெட்டிமுதலனைவோரும் அந்நாரை தரியிலிட்டு தூபதீப நைவேத்தியங்கொடுத்து கோணியானது நெசித்து அதை பதைத்து அந்நகரில் சாகுபடிசெய்த பலதான்யங்களை தினுசுவெவ்வேறாக ஒப்படிசெய்து ரிஷபத்தின்மீதும் பொதி போட்டு ஆங்காங்கு பலதேசங்களிலும் பரிமாறி தனதுஜாதிக்குரிய விருதுக்கொடிகளையேற்றி ஜெகத் ரக்ஷகனெனும் பட்டத்தைத் தங்கள் முழங்காலில் கட்டி

